நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 22 மார்ச் 1993 விலை 5/-




# தமிழ் மக்கள் தமக்கென ஒரு அரசைக் கோருவது நியாயமே!

## - ராவய ஆசிரியர் விக்டர் ஐவன்

இந்நாட்டை ஆளுகின்ற அரசு தமிழ் பேசுகிற எம்மைப் பிரதிநிதித்துவப்படுத் தாத அரசு என்று உணரப்பட்ட பின்னரே தமிழ் மக்கள் தமக்கான ஒரு அரசைப் பற்றிச் சிந்தித்தார்கள். அது தவறு அல்ல. ஒரு அரசு தேவையென்று வந்ததும் அதனை நிறுவுவதற்கான ஒரு நிலப்பகுதி தேவையென்பதும் அடுத்த கட்டத் தேவையாகி விடுகிறது. அந்த வகையில் அம் மக்கள் போராடத்தலைப்பட்டதும் சரியென்றே நான் கருதுகிறேன். நிலப் பிரச்சினையில் மிக மோசமாக அம் மக்களைப் பாதித்த விடயம்தான் அரசுகளினால் திட்டமிடப்பட்டு வடகிழக்குப் பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்கள் என்பது என்னுடைய கருத்தா கும். இது உடனடியாக நிறுத்தப்படுவது மட்டுமல்ல அக் குடியேற்றங்கள் அகற் றப்படவும்,அரசின் அவ்வாறான குடியேற்றத் திட்டங்களுக்கு சிங்கள மக்கள் எந்த வகையிலும் ஆதரவு கொடுக்காமலிருக்கவும் வேண்டும் என்பதையும் மிக அவசியமான ஒரு விடயமாக நான் பார்க்கிறேன்.

## கேவலமான செயலைச் செய்ய தமிழனான நீங்கள் எப்படி உடந்தையானீர்கள்?

**விக்ரர்:** 1981ஆம் ஆண்டு யாழ்ப்பாண நூல் நிலையத் தீ வைப்பிற்கும் அங்கு நடந்த பல சம்பவங்களுக்கும் சிறில் மத்தியூ காரணகர்த்தாவாக இருந்தார் என்பதும், நீங்களும் அதற்கு உடந்தையாக இருந்தீர்கள் என்பதும் நான் கேள்விப்பட்டது. இது உண்மை தானா?

**க..:** அந்நேரம் கள்ள வாக்குகளைப் போடுவதற்காக நாம் போயிருந் தோம் என்பது உண்மை ஆனால் நானோ, சிறில் மத்தியூவோ, காமியோ அல்லது பெஸ்ரஸ் பெரேராவோ நூல் நிலைய எரிப்பில் சம்பந்தப்படவில்லை. அதைச் செய்தது ஹெக்டர் குணவர்த்தனா எனப்படுகிற பொலிஸ் அதிகாரிதான். அவர் தான் அதற்கு முழுப் பொறுப்பாளி. ஆனால் அதை எம்மால் தடுக்க முடியவில்லை என்பது உண்மை. அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

**விக்ரர்:** 1983 கலவரத்தில் சிறில் மத்தியூவுக்கு நேரடிப் பங்கு இருக்கி றது என்பதை ஏற்றுக் கொள்வீகளா?

**க..:** 1983 கலவரத்திற்கு நானும் பங்களிப்பு செய்திருக்கிறேன். நானும், சிறில் மத்தியூவும் மட்டுமல்ல; அரசோடு இருந்த எல்லா சிரேஷ்ட அரசியல் வாதிகளும் அக்கலவரத்தைப் பாவித்திதார்கள். தமக்குத்தே வையானதைச் செய்து கொண்டார்கள். சிறில் மத்தியூ, பிரேமதாசா, காமினி, லலித் போன்ற எல்லோரும் அந்த நேரகாலத்தைப் பாவித்து தமக்குத் தேவையானவற்றைச் செயற்படுத்திக் கொண்டார்கள். ஆனால் நாங்கள் எவரும் யோசிக்க வில்லை இது இவ்வளவு சிக்க லைக் கொண்டு வரும் என்று. ஏனைய கலவரங்களைப் போன்று ஒரு சாதாரண கலவரமாக எழும்பி அடங்கி விடும் என்றே கருதியிருந் தோம்.

**விக்ரர்:** இப்படியான ஒரு கேவலமான செயலைச்செய்யதமிழனான நீங்கள் எப்படிஉடந்தையானீர்கள்?

........

( விக்ரர் ஐவனின் பேட்டியிலிருந்து..... )

## நெல் வயலுக்குத் தீ

மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதேசத்தில் நெல் அறுவடைக்குத் தயாராகவுள்ள வயல்களைப் படையினர் தீ வைத்து அழிப்பதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.


இந்த வயல்கள் புலிகளுக்குச் சொந் தமானவை, புலிகளே இவற்றில் அறுவடை செய்கிறார்கள் எனக் கூறி படையினர் இவற்றைத் தீ வைத்து அழிக்கின்றனராம்.

இது வரை ஏறத்தாழ 500 ஏக்கர் நெல் வயல்கள் இவ்வாறு நாசம் செய்யப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் அரிசி விலை ஆனை விலை! படுவான் கரையில் படையினரின் தீ வைப்பு!

### கிளாலி மரணப்பொறி இன்னும் சில தகவல்கள்:

## வெட்டுக் காயங்களும் சூட்டுக் காயங்களும் [illegible]


வியாபார நோக்கமாகச் சென்ற 33 வயதுடைய எனது அப்பாவி மகன் நடுக்கடலில் வைத்து இராணுவத்தினரால் அநியாயமாகப் படு கொலை செய்யப்பட்டார். இவருடன் பலர் அப் படகில் வந்ததாக அறிந்தேன். எனது மகனின் உடலில் பல வெட்டுக்காயங் களை நான் அவதானித்துள்ளேன். துப்பாக்கிச் சூட்டினாலும் வெட்டுக்காயத்தினாலும் எனது மகன் உயிரிழந்துள்ளார்.

அப்பாவித்தாய்,
க. சரஸ்வதி

மேலேயுள்ள கடிதம் ஜனவரி இரண்டாம் திகதி கிளாளியில் கடற்பய ணத்தின் போது வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்ட க.கணேசலிங்கம் என்பவரது தாயார் எமக்கு எழுதியது.

அதே நாளன்று கடலில் பிரயாணம் செய்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இராஜதுரை அருள்(23) என்பவரது கடவுச்சீட்டின் சிறு பகுதி எரிந்த நிலையில், கரையொதிங்கிய படகிலிருந்து கண்டெடுக்கப்பட் டது. அவரையோ, அவரது சடலத்தையோ இதுவரை காணவில்லை.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இளையதம்பி மகேஸ்வரி(51), மகன் இளையதம்பி சிவசீலன்(26) வேலாயுதபிள்ளை சரவணபவான்(33) ஆகிய மூவரில் ஒருவரது சடலம் கூட கிடைக்கவில்லை எனத் தெரிய வருகிறது. இவர்கள் சாவகச்சேரியைச் சேர்ந்தவர்கள். சிவசீலன் யாழ் பல்கலைக் கழகத்தின் இறுதியாண்டு மாணவன்.

முள்ளியவளையைச் சேர்ந்த அருளானந்தம் சுரேந்திரன்(20) யாழ்ப் பாணத்தில் உயர்வகுப்பில் படித்துக் கொண்டிருந்தவர். முள்ளியவ ளைக்கு வருவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டவர் வந்து சேரவில்லை. சில பிரேதங்கள் கரையொதுங்கியதாகக் கேள்விப்பட்டு நானும், உறவினரும் கடற்கரைக்குப் போய்ப் பார்த்தோம். அவரின் பிரேதம் காணப்படவில்லை எனத் தெரிவித்திருக்கிறார், தந்தையார் அருளானந்தம்.

சரவணையைச் சேர்ந்த நடராசா குகதாஸ்(28), , உடுப்பிட்டியைச் சேர்ந்த திருமேனி புஸ்பராஜா(31), திருநெல்வேலியைச் சேர்ந்த வேலுப்பில்ளை அருளானந்தராஜா, பருத்தித்துறையைச் சேர்ந்த திரு மதி ஆர்.இந்திரவதனா(42) ஆகியோரைப் பற்றிய எதுவித தகவல்க ளும் கிடைக்கவில்லை.



நன்றி : index on censorship

நன்றி - நூலகத்திட்டம்



# எமல்லத் தமிழினி

## நித்தம் சாவாருக்கு...

''நித்தம் சாவாருக்கு அழுவாரில்லை'' என்று ஒரு பழமொழி.
தமிழ் மக்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கின்ற நிலை அது தான்.

இப்போதெல்லாம் தமிழ் மக்களின் பிரச்சினை பற்றிக் கதைப் பதே பலருக்கு அலுத்துவிட்டது. அவர்கள் கிளாலிக் கடலில் சூடுபட்டு இறந்தாலும் சரி, யாழ்ப்பாணத்தில் பட்டினியால் இறந்தாலும் சரி செத்தவர்களை புலிகள் என்று சொல்லிவிட்டால் சரி. அதற்கு மேல் அதுபற்றி அக்கறைப் படவேண்டிய அவசியம் இல்லை.

அங்கு இருப்பவர்களுக்கு சாப்பாடில்லை; வெளிச்சமில்லை; உழைப்புக்கு வழியில்லை. அகதி முகாம்கள் நிரந்தர வதிவிடங்களாகி விட்டன. குடாநாட்டிற்குள் இருந்தாலும் பயம்; வெளியேற நினைத்தாலும் பயம்.
நம்பிக்கை கொள்வதற்கு எதுவுமில்லாத நிலை.
இந்த நிலைக்கு காரணம் புலியா சிங்கமா என்ற சர்ச்சை இன்னும் தீர்ந்தபாடில்லை.
சர்ச்சையை தீர்த்துக் கொள்கிற அக்கறையும் பெரிதாகத் தெரியவில்லை.
இத்தகையதொரு நிலையில் பிறந்து வளர்கிற ஒரு தமிழ்ப் பிஞ்சு தனது எதிர்காலத்தை எப்படி எதிர் கொள்ளப் போகிறது.
எனக்கு ஒன்று மட்டும் தெரிகிறது.
இனி அது பேசப் போகிற மொழி தமிழுமல்ல; சிங்களமுமல்ல.
எல்லோரும் சேர்ந்து அதற்கு கற்றுக் கொடுக்கிற புதிய மொழி.
கொலை.

## யார்தான் கவலைப்படுவார்?

அண்மையில் ஆசிரிய நியமனம் பெற்ற சிலருக்கு கல்வித் திணைக்களம் வழங்கிய நியமனக் கடிதம் சிங்களத்தில் வழங்கப்பட்டிருந்தது.
நியமனக்கடிதம் சிங்களத்தில் வழங்கப்படுவதற்கான காரணம் என்ன என்று விசாரித்ததில், தமிழில் நியமனக் கடிதங்களை எழுத யாரும் இல்லையாம் என்று தெரிவித்தார்கள்.

இது எவ்வளவு தூரம் உண்மை என்று தெரியவில்லை.
''உத்தியோகபூர்வ மொழி'' அந்தஸ்து தமிழ் மொழிக்கு வழங்கப்பட்டுவிட்ட பின்னும் பல அலுவலகங்களில் இன்னமும் சிங்களத்திலேயே கடிதங்கள் எழுதப்படுகின்றன.
இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு அறிவித்தது.
இது தொடர்பாக ஒரு விசாரணைக் கமிசனும் நியமிக்கப்பட்டதாக கேள்வி.
ஆனால் என்ன நடக்கிறதென்று தெரியவில்லை.
நியமனக் கடிதம் பெற்ற ஆசிரியர் ஒருவரை அணுகி, ஏன் நீங்கள் இதை திருப்பி அனுப்பி தமிழில் தருமாறு கேட்கக் கூடாது என்று கேட்டேன்.
அவர் ஒருவிதமாக என்னைப் பார்த்தார்.'இப்ப இதுதானோ பிரச்சினை' என்று கேட்டார் பிறகு.

உண்மைதான்.'அறுபதுகளில் மொழி அந்தஸ்து ஒரு பிரச்சினையாக இருந்தது. அப்போது ஒன்றாக இருக்க சில உரிமைகளை கேட்டார்கள். இப்போது இரண்டாகி விட்டபின் எதற்காக இது பற்றி கேட்க வேண்டும்? நாடு பிரியவில்லையோ இல்லையோ, அது இரண்டாகப் பிளந்தே விட்டது. அதற்குப் பிறகு அப்படிக் கேட்பதில் யாருக்கு அக்கறை வரப் போகிறது? அந்நிய நாட்டில் சிங்களத்தில் இருந்தாலென்ன பாளியிலிருந்தால் என்ன யாருக்கு அக்கறை?' என்ற நினைப்புப்போலும்.

தமிழன் உயிருடன் இருக்க அனுமதி கிடைக்குமா என்ற பிரச்சினை பெரிதாக இருக்கும் போது மொழி பற்றி யார்தான் கவலைப்படுவார்கள்?

## சுதந்திரம் என்பது ...

பெப்ரவரி நாலாம் திகதி.
கொழும்பு மாநகரம் முழுவதும் குதூகலமான கொண்டாட்டம்.
இலங்கையின் 45வது சுதந்திர தினவிழா.
ஒவ்வொரு பாடசாலை மாணவர்களும் மாணவியர்களும் கையில் கொடியுடன்.
பார்க்க அழகாக இருந்தது.
அவர்கள் உண்மையாகவே அதில் சந்தோசமடைகிறார்கள் போலும்.
ஆனால் எனக்கு?
சுதந்திர தினம் என்றால் சிங்கக் கொடியினைப் பிடுங்கி எறிவது, எரிப்பது, கறுப்புக் கொடி ஏற்றுவது, பொலிசிடம் அடி உதை வாங்குவது என்கிற வரலாற்றை மட்டுமே பார்த்த எனக்கு இது வியப்புத்தான்.
தேசிய கீதம் பாடினால் எழுந்து நிற்பதும், தேசியக் கொடி ஏற்றுவதில் பெருமைப்படுவதும்...
பொறாமையாகவும் இருந்தது.
எனக்கெல்லாம் எப்போது இது - இந்த உணர்வுகள் வரும்?
சிங்கக் கொடி எம்மைப் பொறுத்தளவில் எமது கொடியாக ஒருபோதும் உணர வைக்கப்பட்டதில்லை; நாம் உணர்ந்ததும் இல்லை.
அது எம்மீது திணிக்கப்பட்டது.
இன்று வரை அதை எமது கொடியாக உணர முடியவில்லை.
ஆனால்,
இதை எமக்கு ஊட்டியவர்களும், அவர்களின் வழித் தோன்றல்களும் எப்படி இலகுவாக இதை ஏற்றுக் கொண்டுவிட்டார்கள்?

## தமிழ் மறவர்களின் தாக்குதல்

பத்திரிகையாளர் டி.பி.எஸ். ஜெயராஜ் கனடாவில் வைத்து தாக்கப்பட்டதாக ஒரு செய்தி பத்திரிகைகளில் வெளிவந்திருந்தது.
இதைப் புலிகளுக்கு சாதகமான ஒரு தமிழ் அமைப்பு செய்திருக்கலாம் என்று அந்தச் செய்தி மேலும் குறிப்பிட்டது.
உண்மை என்னவென்று இதுவரை தெரியவில்லை.
ஆனால் டி.பி.எஸ். ஜெயராஜ் புலிகளால் தாக்கப்பட்டிருக்கக் கூடும் என்பதை நம்புவது கடினமாகவே உள்ளது.
அவரது ''செந்தாமரை'' புலிகளை எதிர்க்கிற பத்திரிகையல்ல என்பது மட்டுமல்ல, அவர்களை நியாயப்படுத்தவும் செய்கிற ஒன்றாக இருந்தும் வந்துள்ளது.
அவர் தாக்கப்பட்டதற்கு காரணம் அரசியல் காரணமாக இருக்க முடியுமா என்பது புரியவில்லை.

''பத்திரிகையாளன் கட்சியின் ஊழியனல்ல; அவன் மக்களின் ஊழியன். அவன் எப்போதும் மக்களின் பக்கம் நின்று எழுத வேண்டும் '' என்று கூறுவார் மூத்த பத்திரிகையாளரும் முன்னாள் ''சற்றடே றிவியூ''வின் ஆசிரியருமான காமினி நவரட்ன அவர்கள். இதனால் காமினி ''புலிஆள்'' என்றும், ''ஜே. ஆரின் ஆள்'' என்றும் எமது ''தமிழ் கூறும் நல்லுலகினால்'' சந்தேகிக்கப்பட்டவர். ஒரு தடவை அவர் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு விசாரிக்கவும்பட்டார்.

ஆனால் அவர் எப்போதும் கூறியதற்கேற்பவே இருந்து வந்தார். இதனால் தான் அவரது ''சற்றடே றிவியூ''வின் இதழிலிருந்து ''சற்றடே றிவியூ'' நிர்வாகம் அவரை வெளியேற்றியது.

அதன்பின் அவர் ''நியூ சற்றடே றிவியூ''வைத் தொடங்கினார். அவரை வெளியேற்றியதற்கு நிர்வாகம் கூறிய காரணம், அவர் ''இந்தியப் படையையும், அதன் அமைதி காக்கும் பணியையும் விமர்சித்தார்'' என்பதே.

யார் மக்களுக்கு எதிராகப் போனாலும் நான் எதிர்ப்பேன் என்பது அவரது பதிலாக இருந்தது.
''இந்தியாவை அசௌகரியப்படுத்த விரும்பாத'' நிர்வாகம் அவரை வெளியேற்றியது.
ஆனால் ''ஜெயராஜ்'' அவர்களுக்கு அப்படிப் பிரச்சினை இருந்ததில்லை.
அவர் காமினி நவரட்ன போல பிழைக்கத் தெரியாதவரல்ல.
ஆயின் ஏன் இப்படி நடந்தது?

எப்படியோ, இத்தாக்குதல் எல்லோராலும் கண்டிக்கப்பட வேண்டியது.
பத்திரிகையாளனின் ஆயுதம் துப்பாக்கியோ பொல்லோ அல்ல.
அவனை அவனது ஆயுதத்தாலேயே - பேனையாலேயே - அணுக வேண்டும். டி.பி.எஸ்சைத் தாக்கிய ''தமிழ் மறவர்களை'' எல்லாப் பத்திரிகையாளர்களும் வன்மையாகக் கண்டிக்க வேண்டும்.

## புலிகள் என்ன சொல்லப் போகிறார்கள்?

''சிங்கள ஆரக்சக சபா'' என்றொரு அமைப்பு.
''சிங்கள பாதுகாப்பு சபை '' என்று அர்த்தம்.
ஸ்ரீலங்கா என்பது சிங்கள பூமி என்றும், தமிழ் மக்களுக்கு பாரம்பரிய தாயகப் பிரதேசம் என்ற ஒன்று இருக்கிறது என்பது சிங்கள மக்களை அழிப்பதற்கான ஒரு கோரிக்கை என்றும் கூறிவருவது இவ்வமைப்பு.

சிங்கள இனத்தைப் பாதுகாப்பது என்பது தமிழினத்தை சிறை வைத்தே என்பது இதன் அபிப்பிராயம் போலும்.

முன்னாள் அமைச்சர் காமினி ஜயசூரிய இதன் ஸ்தாபகர்.
'தேசிய சிந்தனை' (ஜாதிக சிந்தனய), ஹெல உரிமை இயக்கம் என்பவற்றுடன் கைகோர்த்து நிற்கிற இன்னொரு அமைப்பு இது.

தொடர்ச்சியாக, தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைத் திரித்து சிங்கள மக்கள் மத்தியில் இனவாத முலாம் பூசி அறிவிப்பதில் மற்ற இரண்டு போக்குகளையும் விட தீவிரமாக இயங்குவது இது.

இதற்கு ''வாய்ப்பும் வசதியும் ஊக்கமும்'' கொடுத்து இதன் கருத்துக்களை பிரச்சாரம் செய்வதற்கு உடந்தையாக இருப்பது ஐலன்ட், திவயின பத்திரிகைகள்.

ஸ்ரீலங்கா அரசின் ஜனநாயக விரோதப் போக்குகட்கெதிராக எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவு தரும் இப்பத்திரிகைகள், தமிழ் மக்களுக்கு எதிரான அரச நடவடிக்கைகளை ஜனநாயக மீறலாக நினைத்ததில்லை. அதன் அபிப்பிராயத்தில் அரச நடவடிக்கைகளில் இன்னமும் தீவிரம் காணாது. அதன் அண்மைய இதழொன்றில் வெளியான '' ஆரக்சக'' சபாவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சுவையான கருத்து இது:''பெரும்பான்மையிடமிருந்து அதன் இன ஒழிப்பிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தமது பாரம்பரிய தாயகத்தைக் கோரும் சிறுபான்மையினர் தமது பிரதேசங்களிலிருந்து தப்பியோடி சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில், தாம் முழுமையான பாதுகாப்புடன் வாழ முடியும் என்று வந்து கொண்டிருப்பது ஒரு முரண்நகையான அம்சமாகும்!''
அரச இராணுவத்திற்கு எது தேவையோ அது இவ்வாறு நியாயப்படுத்தப்படுகிறது.
ஆனால் புலிகள் ....
அவர்கள் இதற்கு என்ன சொல்லப் போகிறார்கள்.

## இரு துளிகள்

*'காடுகள் பற்றி எரியும் போது ரோஜாக்களுக்காக வருத்தப்பட நேரமேது' - ஸ்லோவாஸ்கி*

*காடுகள் எரிந்தன*
*ஆயினும்*
*ரோஜாச் செண்டுகளைப் போன்ற தம் கரங்களை*
*மாலையாய் அணிந்து கொண்டன*
*தம் கழுத்துகளில்*

*பாதுகாப்பிடங்களுக்கு*
*மக்கள் ஓடினர்-*
*ஒருவர் ஒளிந்து கொள்ளக்கூடிய அளவிற்குத்*
*தன் மனைவிக்கு அடர்த்தியான கூந்தல்*
*என ஒருவன் சொன்னான்*

*ஒரு கம்பளிப் போர்வைக்குள்*
*தம்மை இழுத்து மூடிக் கொண்டவாறு*
*அவர்கள் வெட்கத்தை மறந்து முணுமுணுத்தனர்*
*காதலர்கள் பாடும் ஜெபப்பாட்டை*

*நிலைமை மிக மோசமானதும்*
*அவர்கள் ஒருவர் கண்களுக்குள்*
*மற்றவர் பாய்ந்தனர்*
*கண்களை மூடிக் கொண்டனர் இறுக்கமாக*

*நெருப்புக் கொழுந்துகள்*
*அவர்களது கண்ணிமைகளை எட்டிய போதும் கூட*
*இறுக்க மூடிய கண்களை அவர்கள்*
*திறக்கவேயில்லை*

*இறுதிவரை அவர்கள் தீரத்துடனிருந்தனர்*
*இறுதிவரை அவர்கள் விசுவாசமாக இருந்தனர்*
*இறுதிவரை அவர்கள் ஒன்று போல இருந்தனர்*
*ஒரு முகத்தின் விளிம்பில் ஒட்டிக்கொண்டிருந்த*
*இரு துளிகளைப் போல.*

- ஜிபிக்னியூ ஹெர்பேர்ட்
தமிழில்: வ.கீதா
எஸ். வி. ராஜதுரை.

நன்றி - நூலகத்திட்டம்



# சுதந்திரப்பத்திரிகைகளின்சுதந்திரம்?

"லக்திவ" என்ற சிங்கள வாரப்பத்திரிகையின் பொரளை அலுவலகம் திடீர் என கொழும்பு மாநகர சபை அதிகாரிகளால் சீல் வைக்கப்பட்டது. இவ் அலுவலக கட்டிடம் கொழும்பு மாநகர சபைக்கு சொந்தமானதாம். இரண்டு மாதங்களுக்கான வாடகைப் பணம் செலுத்தப்படாததாலேயே இவ் அலுவலகம் சீல் வைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. கடந்த சில மாதங்களாக தீவிரம் அடைந்திருக்கும் பத்திரிகைகள், பத்திரிகையாளர் மீதான தாக்குதலுக்கு சிகரம் வைத்தாற் போல் பிரதமர் பாராளுமன்றத்தில் இப் பத்திரிகை சீல் வைக்கப்பட்டது குறித்து சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கேள்விக்கு அளித்த பதில் அமைந்துள்ளது.

இந்தப் பத்திரிகை கடந்த ஆண்டு ஆரம்பத்தில் தொடங்கப்பட்டு மிகக் குறுகிய காலத்துக்குள்ளேயே அறுபதினாயிரம் பிரதிகளுக்கு மேல் விலைப்படுகிற ஒரு பத்திரிகையாகி விட்டது. அரசாங்கத்தையும் அதன் நடவடிக்கைகளையும் தீவிரமாக விமர்சிக்கும் இப் பத்திரிகை மீது கொழும்பு மாநகரசபை எடுத்த நடவடிக்கையை நியாயப்படுத்துவதாக அமைந்தது பிரதமரின் பேச்சு. அது மட்டுமல்லாமல் இதுவும் இது போன்ற பத்திரிகைகளான "ராவய", "யுக்திய" பத்திரிகைளையும் அதன ஆசிரியர்களையும் தாக்கியுள்ள பிரதமரின் பேச்சின் போது பத்திரிகைச் சுதந்திரம் வேறு, பத்திரிகை முதலாளிகள் வரி, வாடகை என்பன கட்டாமல் இருப்பதென்பது வேறு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலோட்டமாக பார்க்கும் போது இது நியாயமான கருத்துப் போல தோன்றினாலும் உண்மை அப்படி அல்ல என்பது நிகழ்வுகளைக் கூர்ந்து கவனிக்கும் போது தெளிவாகத் தெரியும்.

கொழும்பு மாநகர சபை வரி அறவிடுதல், மற்றும் வாடகை அறவிடுதல் ஆகியவற்றில் "லக்திவ" காரியாலயத்தைத் தவிர வேறெதற்கும் முன்னெச்சரிக்கை வழங்காமல் இப்படி தனது அதிகாரத்தைக் காட்டியதில்லை. ஏற்கனவே பல மாதக் கணக்காக நிலுவைகள் செலுத்தப்படாதுள்ள பல கட்டிடங்கள் இந்தப் பகுதியிலேயே உள்ளன. தவிரவும், "லக்திவ"வைச் சேர்ந்தவர்கள் சீல் வைக்கப்பட்டவுடன் வாடகைப் பணத்தைக் கட்டவென விரைந்த போது அதை ஏற்றுக் கொள்ள அங்குள்ள ஊழியர்கள் மறுத்து விட்டார்கள். ஏற்கனவே பாதியளவு முடிந்த நிலையில் இருந்த பத்திரிகையை அது வெளிவர முன்பாகவே சீல் வைத்த அதிகாரிகள் வாடகைப் பணத்தை வாங்க முடியாது என்று தெரிவித்தது இச் சீல் வைப்புக்கான பின்னணி என்ன என்பதை வெளிப்படையாக காட்டுகின்றது. விசாரித்ததில் சில ஊழியர்கள் மேலிடத்து உத்தரவு என்று வேறு தெரிவித்துள்ளார்கள். ஏற்கனவே "யுக்திய" அச்சிடப்பட்ட அச்சகம் இவ்வாறு சீல் வைக்கப்பட்டதும், சீல் வைக்கப்பட்ட நிலையிலேயே உள்ளே இருந்த அச்சக இயந்திரங்கள் சிதைக்கப்பட்டதும் எல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும்.

"லேக் ஹவுஸ் " பத்திரிகைகளை தேசிய மயமாக்கியது "தவச -சன் குறூப்" பத்திரிகைகளை தடை செய்தது போன்ற பத்திரிகைகட்கு எதிரான தாக்குதலை இன்றைய




'லக்திவ' ஆசிரியர் சுனில்மாதவ

அரசாங்கத்திற்கு சற்றும் குறைவில்லாமல் ஆற்றியுள்ள சிறிமாவோ பண்டாரநாயக்கா இன்று இப் பத்திரிகைகள் மீதான தாக்குதல்களுக்காக குரல் கொடுப்பதை நையாண்டி செய்த பிரதமர் இப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் முன்னால் ஜே.வி.பி. என்று, முத்திரை வேறு குத்தியுள்ளார்.

இந்த நிகழ்ச்சிகள் இன்றைய சூழலில் ஒரு சுதந்திரமான பத்திரிகையின் தேவை பற்றி பேசுவோரின் மத்தியில் பெருமளவு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

பத்திரிகைத்துறைக்கும் அரசுக்கும் இடையிலான உறவு என்பது எமது நாட்டைப் பொறுத்தளவில் ஒரு தொடர்ச்சியான பிரச்சினையாக இருந்து வருகின்றது. தமிழ் பத்திரிகையைப் பொறுத்த வரை 'விழுந்த மாட்டிற்கு குறி சுடுகிற' தன்மை உள்ள வீரகேசரி தவிர்ந்த வேறெந்தப் பத்திரிகையும் இந்த நெருக்கடியை எதிர் நோக்காமல் இருந்ததில்லை. யாழ்ப்பாணத்தில் வெளிவந்த அனைத்துப் பத்திரிகைகளும் அரசு, இந்தியப் படை, ஈ.பி.ஆர்.எல்.எப் கூட்டு, புலிகள் என்ற அனைவருக்கும் மாறிமாறி அடிபணிய வேண்டிய நிலை இருந்தது. பத்திரிகைகளின் செய்தியைத் தடுத்தல் பத்திரிகையாளர்களைத் தாக்குதல், சிறைப் பிடித்தல், கொல்லுதல்,




அச்சத்தை அழித்தல் என்று அனைத்து வழிகளிலும் இவை இவர்களால் அரங்கேற்றப்பட்டன.

ஆட்சியில் இருப்பவர்களுக்கு எதிராக எழுத நினைப்பவர்கள் எதிர்க் கட்சிகளுடனும் மற்றவர்கள் ஆட்சியில் இருப்பவர்களுடனும் இணைந்து நிற்கிற ஒரு போக்கே எமது நாட்டின் பத்திரிகையாளர் வரலாறாக இருந்து வருகின்றது.

சமீப காலமாக இதற்கு சற்று மாறுபட்ட விதத்தில் இரு சாராருடனும் ஒத்துப் போகாத ஒரு புதிய போக்கை பிரதிநிதித்துவப்படுத்துபவையாக வெளி வருபவை தான் நாம் மேலே குறிப்பிட்ட மூன்று பத்திரிகைகளும்.

"தேசிய" பத்திரிகைகளை விட வேகமாக விற்பனையாவதும் விரும்பிப் படிக்கப்படுவதுமான இந்த வாரப் பத்திரிகைகளின் வளர்ச்சி மக்கள் மத்தியில் நிலவும் ஒரு மாற்றுக் கருத்துக்களை அறிவதற்கான விருப்பின் வளர்ச்சியை வெளிப்படையாக காட்டுகின்றது.

• • • •

இவ்விடத்தில் நாம் கவனிக்க வேண்டிய இன்னொரு அம்சமும் இருக்கிறது. "சுதந்திரப் பத்திரிகை" பற்றிப் பேசுபவர்கள் "நிகழ்வுகளையும் போக்குகளையும் அறிந்து கொள்வதற்கான மக்களின் உரிமை " மதிக்கப்பட வேண்டுமென்று கோருகிறார்கள். அதே நேரத்தில் நாங்கள் எந்தக் கட்சிகளையோ நிறுவனங்களையோ சார்ந்தவர்கள் அல்ல என்றும் தெரிவிக்கிறார்கள். எந்தக் கருத்துகட்கும் நாம் "தாலி கட்டிக் கொண்டவர்கள் " அல்ல என்று அறிவிப்பதில் பெருமைப் பட்டுக் கொள்கிறார்கள். மக்களிடையே பரவி வருகின்ற நிலவும் அரசு, அமைப்பு என்பன குறித்த அதிருப்தி காரணமாக அதிலிருந்து விடுபடுவதற்கான வேட்கையின் காரணமாக இவர்களது பத்திரிகைக் கருத்துகள் பெருமளவுக்கு ஆர்வமூட்டுபவையாகவும் ஆதரவு தருபவையாகவும் இருப்பதென்னவோ உண்மைதான்.



டி.பி.விஜேதுங்க.

ஆனால் அப்படி வரும் ஆதரவும் ஆர்வமும் இவர்களால் சரியாக வழிகாட்டப்படாமல் போகும் போது ஓய்ந்து விடும் என்பது மிகவும் முக்கியமான ஒன்று. இவர்கள் குறிப்பிடுகின்ற சார்பற்ற "சுதந்திரம்" என்பது இவர்களே அறிந்து கொள்ளாமல் மயங்குகின்ற ஒரு மாயையே. கருத்துக்களை பேசவும் எழுதவும் அதற்காக இயங்கவும் உள்ள மனித சுதந்திரத்திற்காக போராடும் அதே வேளையில் நாம் எதையும் சாராதவர்கள் என்று கூறுவது அவர்களையே பலவீனப்படுத்துவதாகும்.

"அதிருப்தி என்பது எவ்வளவிற்கு எவ்வளவு நியாயமானதோ அரசையும், அரசாக வரத் துடிக்கும் மாற்று அரசமைக்கும் தகமை வாய்ந்த கட்சிகளையும் சமூக விரோத, மக்கள் விரோத போக்குகளையும் எதிர்ப்பதும், அம்பலப்படுத்துவதும் எவ்வளவுக்கு எவ்வளவு அவசியமானதோ அவ்வளவுக்கு அவ்வளவு போதாததுமாகும். மாற்றத்தின் தேவையை வலியுறுத்துபவர்களிடம் மாற்றம் எது என்ற கேள்வி எழுப்பப்படுகின்ற போது அது எமது பணி அல்ல என்று ஒதுங்கிவிடுவது சாத்தியமற்றது. இது நிலமையை மேலும் மோசமாக்கியே தீரும்.

ஒருவேளை இக் கடமை பத்திரிகையாளர்களது அல்ல என்று சிலர் வாதிடக் கூடும். அப்படியானால் அது யாருடைய கடமை என்ற ஒரு கேள்வி உடனே பிறக்கின்றது.

"பத்திரிகையாளன் எப்போதும் மக்களின் பக்கம் நிற்பவன்; அவன் மக்களுக்காக பேசுபவன். மக்களின் குரலை (இலங்கை வானொலியின் "மக்களின் குரல்" அல்ல) ஒலிப்பவன் என்கிறார்கள் சில மூத்த பத்திரிகையாளர்கள்.

மக்களுக்கு பேச்சாளர்களும், நண்பர்களும் தேவைதான். ஆனால் அதைவிட முக்கிய தேவை அவர்களுக்குரிய தலைமை.

அதை உருவாக்கும் கடமை தமக்கு இல்லை என்று பத்திரிகையாளர் கருதக் கூடும். ஆனால் பொறுப்பு இல்லை என்று சொல்லி விட முடியாது!

மோசமறிப்பான்.

## ஐவர்

- ஜிபிக்னியூஹெர்பேர்ட்



தமிழில்:வ.கீதா
எஸ்.வி.ராஜதுரை

1
காலையில் அவர்களைக்
கற்கள் பரவிய முற்றத்திற்கு அழைத்துச் சென்று
சுவர்கள் மீது சாய்ந்து நிற்கச் செய்கின்றனர்

ஐவர்
இருவர் மிகவும் இளையவர்கள்
மற்றவர் நடுத்தர வயதினர்
அவர்களைப் பற்றிச் சொல்ல
வேறேதும் இல்லை

2
படைவீரர்கள் தங்கள் துப்பாக்கிகளைக்
குறிவைக்கும் போது
எல்லாமே திடீரென
வெளிப்படையானவற்றுக்கே உரிய
பகட்டொளியோடு காட்சியளிக்கின்றன

மஞ்சள் சுவர்
குளிர்ந்த நீலவானம்
சுவரின் மேல் உள்ள கறுப்பு வேலிக் கம்பி
அடிவானத்திற்குப் பதிலாக

ஐம்புலன்களும் எதிர்த்தெழும்
தருணம் அதுதான்
மூழ்கும் கப்பலிலிருந்து தப்பித்து ஓடும் எலிகள் போல
அவை தப்பியோட விரும்பும்

தோட்டா அதன் இலக்கை அடைவதற்கு முன்
பாய்ந்து வரும் அதன் பாதையைக்
கண்கள் கண்டுகொள்ளும்
காதுகள் உருக்கு சீறுவதைப் பதிவுசெய்யும்
எரிச்சலூட்டும் புகை நாசித் துவாரங்களை நிரப்பும்
உள்வாயை ஒரு இரத்தப் பூவிதழ் ஸ்பரிசிக்கும்
உடல் இறுகிப் பின் தொய்ந்து விழும்

அவர்கள் இப்போது மண்ணில்
கண்கள் வரை நிழல் போர்த்தப்பட்டு.
படைவீரர்கள் திரும்பிச் செல்கின்றனர்
அவர்களது தலைக் கவசங்களுக்கும்
அவற்றை இறுக்கிப் பிடிக்கும் தோற்பட்டைகளுக்கும்
உயிரதிகம்
சுவரருகே வீழ்ந்து கிடக்கும்
அவாகளைக் காட்டிலும்

3
இதை நான் இன்றல்ல
நேற்று முன் தினமே அறிந்து கொண்டேன்
அப்படியானால் நான் ஏன
மலர்களைப் பற்றிய சாதாரணக் கவிதைகளை
எழுதிக் கொண்டிருந்தேன்

சுட்டுக் கொல்லப்படுவதற்கு முதல் நாளிரவு
அந்த ஐவரும் என்ன பேசிக் கொண்டிருந்தனர்
தீர்க்க தரிசனக் கனவுகள் பற்றி
ஒரு வேசியர் விடுதிக்குச் சென்று வந்தது பற்றி
மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் பற்றி
ஒரு கடற் பயணம் பற்றி
தன்னிடம் இஸ்பேட்டுகள் இருக்கும் போது
அவன் தன் சீட்டுகள் அனைத்தையும்
திறந்து காட்டியிருக்கக் கூடாது என்பது பற்றி
மதுரசம் குடித்த பிறகு உனக்குத் தலைவலி வருமானால்
வோட்கா குடிப்பது எவ்வளவு நல்லது என்பது பற்றி
பெண்களைப் பற்றி
மலரைப் பற்றி
வாழ்க்கையைப் பற்றி

எனவே கவிதையில் ஒருவன்
கிரேக்க இடையர்களைப் பற்றி எழுதலாம்
காலை நேர வானின் வண்ணங்களைக்
கவிதையில் பிடித்துக்காட்ட முயற்சி செய்யலாம்
காதலைப் பற்றி எழுதலாம்

மேலும்,
மீண்டுமொரு முறை
வஞ்சிக்கப்பட்ட உலகிற்கு
மனப்பூர்வமாக வழங்கலாம்
ஒரு ரோஜாவை.

நன்றி - நூலகத்திட்டம்



## இன்றைய யாழ்ப்பாணத்தில் கலை - 5

# பேசாப் பொருளைப் பேச ......

கலாநிதி
ஆ. கிருஷ்ணதுரை

**''பேசாப் பொருளை
பேச நான் துணிந்தேன்.
கேட்கா வரத்தை
கேட்க நான் துணிந்தேன்''.**

மேற்படி பாரதியாரின் வரிகளுடன் தான் ஆரம்பமாகிறது. சமீபத்தில் இங்கு மேடையேறிய **'அன்னை இட்ட தீ'**. குழந்தை ம.சண்முக லிங்கத்தின் பிரதிதான் இதுவும். நெறியாள்கையும் அவரே. நாடக **அரங்கக் கல்லூரியின்** தயாரிப்பு இது. தலைப்பு அழகாகவும் பொருத்தமாகவும் அமைகின்றது. குழந்தை ம.சண்முகலிங்கத்தின் பல நாடகத் தலைப்புகள் இத்தகையனவே. மாதொருபாகம், நரகத் **திலிடர்ப் படோம், மண் சுமந்த மேனியர், தாயுமாய் நாயுமானார், புழுவாய் மரமாகி, எந்தையும் தாயும்,** இதே வரிசையில் **அன்னை இட்ட தீ.** பழங்கவிதைகளின் வரிகள் நாடகத்திற்கு இயைபுற பொருந்தி வருகின்றன. அவை தரும் அர்த்தங்கள் அநேகம்.

பேசாப் பொருளை பேசப் புறப்பட்ட முக்கிய நாடகம் இது. இத்தகைய நாடகம் இக்காலச்சூழலில் இங்கு மேடையேறியது ஆச்சரியமானது.

இரு குடும்பத்தைச் சுற்றிய அரங்கு. பல வழிகளிலும் துயரம் சூழ்ந்த குடும்பம். மோசமான இனப் படுகொலையில் தலைவனை இழந்தவர்கள். (அது 1958, 1977, 1983 மூன்றில் ஒரு ஆண்டாக இருக்கலாம்.) 1987 இல் இந்திய அமைதிப்படையினால் அகதி முகாமில் கொல்லப்பட்ட மகள். மூத்த மகளின் கணவன் கொழும்புக்குப் புறப்பட்டுப் போன இடத்தில் தாண்டிக் குளத்தில் கொல்லப்பட்டிருக்கலாம் எனப்படுகிறது. இதுதான் பின்னணி. அவன் கொல்லப்படவில்லை என்பது அவனின் தாயாரின் நம்பிக்கை. மனைவியானவள் தாயின் துன்பங்களுக்கிடையிலும், மாமியின் நம்பிக்கைக்கிடையிலும் அல்லாடுகிறாள். அவள் அண்ணன் மைத்துனனைத் தேடி வவுனியா சென்று இராணுவத்தால் சித்திரவதைப்படுகிறான். கதை என்றபோதிலும் இந் நாடகம் சொல்ல வருகிற முக்கிய செய்தி போர்க்காலச் சூழல் மனிதனின் மனதைக் கொல்கிறது. மனிதன் இறப்பதென்பது இழப்புத்தான். ஆனால் சமூகமே மன நோயாளியாக மாறுகையில் அதைவிட இழப்பு வேறொன்றுமில்லை. போர் நிராகரிக்கப்பட வேண்டியது. இது நாடகம் எனும் வகையில் மகத்தான செய்தியைக் கூறி வெற்றி பெறுகின்றது. முடிகிற போதும் **'பேசாப் பொருளை பேச நான் துணிந்தேன்'** எனத் தான் முடிகிறது. இது பாரதியார் சொல்கிற வரிகள் அல்ல. குழந்தை ம.சண்முகலிங்கம் கூறுகிற வரிகள்.

இந் நாடகம் புலிகளின் ஒரு சாராரிடையே கசப்பைத் தந்திருக்கிறது. போரை நிராகரிப்பதனூடாக தாம் ஆயுதம் தூக்கியதும் பிழை எனக் கருதப் பட்டு விடும் என்பது அவர்கள் வாதம். **'நாங்கள் போரை விரும்பவில்லை; போர் எங்கள் மீது திணிக்கப் பட்டிருக்கிறது'** என்கிறார்கள் அவர்கள்.

ஆனால் கருத்தைக் கருத்தால் எதிர்கொள்கிற மன நிலையில் அவர்கள் இல்லை. இந் நாடகம் தடை செய்யப்பட வேண்டும் என முக்கிய புலி உறுப்பினர்கள் கோரினார்கள். பல்கலைக்கழகக் கைலாசபதி அரங்கிலும், சுண்டிக்குளி மகளிர் கல்லூரியிலும் என நகரம் சார்ந்த பகுதிகளிளேயே இந் நாடகம் மேடையேற்றப்பட்டது. கிராமங்களுக்குள் இந் நாடகம் மேடையேற்றுவது தடைசெய்யப்பட்டது. இத்தனைக்கும் இது நாடக அரங்கக் கல்லூரியின் ஒரு தயாரிப்பு. அதனால் தான் இவ்வளவுக்காவது விட்டு வைத்தார்கள். வேறொரு அமைப்பினது தயாரிப்பாக இருக்கும் பட்சத்தில், அந்த அமைப்பு இந்நேரம் விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டிருக்கும்.

நாடக அரங்கக் கல்லூரி புலிகளின் அரசியலை எதிர்க்கிற ஒரு அமைப்பு அல்ல. அடிப்படையில் அதை அங்கீகரிக்கிற - வழமையான அறிஞர்கள் - புத்திஜீவிகளுக்கான முரண்பாடுகளைக் கொண்ட ஒரு அமைப்பு. ஆயினும் ஒரு நல்ல கலைஞரது நல்ல படைப்பு, சார்ந்திருக்கிற சமூக அரசியல் சார்பையும் மீறி சில உண்மைகளை வெளிப்படுத்தி விடுகிறது. மக்களின் வாழ்வுடன் உயிர்த்துடிப்புள்ள தொடர்புள்ள ஒரு கலைஞனும் அவனது படைப்பும், அதிகாரத்திலுள்ளவர்களுக்கு முகச் சுழிப்பினை ஏற்படுத்துவது சாத்தியமே. குழந்தை ஒரு நல்ல கலைஞர்; படைப்பாளி. எனவே அவரது படைப்பு புலிகளுக்கு எரிச்சலூட்டியது வியப்பில்லை.

இந் நாடகம் எக்காலத்திற்கும் எவ்விடத்திற்கும் பொருத்தமான தொன்று. அரங்க அனுபவம் என்பதைத் தவிர்த்துக் கூட, இலக்கியமாகவும் இதனை ரசிக்கலாம். மற்றும் படியும் தமிழர் மீது எய்யப்பட்ட ஒவ்வொரு அம்புகளையும், காயங்களையும் கூட இந் நாடகம் முனைப்புடன் வெளிப்படுத்துகிறது. ஒரு அம்பையும் காயத்தையும் தவிர. புலிகளினால் எய்யப்பட்ட அம்பையும் காயத்தையும் எடுத்துக்காட்ட யாழ்ப்பாணம் உகந்த சூழலும் அல்ல.

ஒரு மணித்தியாலத்திற்கு சற்று மேலாகத் தான் நாடகம் நடந்தது. அவ்வளவு நேரமும் அரங்கிலேயே உணர்விழந்து கிடந்தோம். இறுதியிலும் பனித்திருக்கும் கண்ணீரைத் துடைத்தபடிதான் அனேகர் வெளியேறினர். பார்வையாளர் குடும்பத்தில் ஒருவராக மாறிவிட்டார் என்பதுதான் வெளிப்பட்டது. எனினும், பார்வையாளரின் ஆதங்கமும் அவர் துயரடையக் காரணமானது. போர் எப்போது ஓயப் போகிறது? இறப்புகள் எப்போது நிறுத்தப்படும்? சிரித்தபடியும், ரசித்தபடியும் எப்போது கலைகளை ரசிப்பது? அல்லது இதுதான் நிரந்தரமானதா? இறக்கும் வரையும் இதுதான் விதியா?

யதார்த்த நெறி சார்ந்த நாடகம் என்பதனாலும் பார்வையாளரை அதிகம் தொட்டது எனலாம். நடிகர்களின் நடிப்பு, யுக்தி, குறியீடு, மோடிப்படுத்தப்பட்ட தன்மை இல்லாத நெறியாள்கை இவையும் பார்வையாளரை ஒன்றிப் போக வைத்தன. தமிழில் மிக நல்ல நாடகம்.

இத் தொடரை இத்துடன் நிறுத்திக் கொள்ளலாம் என நினைக்கிறேன்.

இன்றைய யாழ்ப்பாணத்தில் கலை இவ்வளவுதான். அவ்வப்போது ஆங்காங்கே மேலும் மேலும் நாடக முயற்சிகள் தென்படுகின்றன. ஏனைய கலை, இலக்கியம் பற்றியவை வெறும் கானல்தான். இசைப் பாடல்களின் வளர்ச்சியையும் குறிப்பிடலாம். **நெய்தல்** என ஒரு ஒலிப்பதிவு நாடா நன்றாக இருக்கிறது. இசைப்பாடல்கள் தொடர்பாகவும் முயற்சிகள் காணப்படுகின்றன.

மற்றும்படி மக்கள் மந்தைக் கூட்டமாகவே கணிக்கப் படுகிறார்கள். ஆனால் ஒன்று, கலை இலக்கியம் மலராமல் சமுதாயம் இல்லை. சமுதாயத்தின் முழுமை இல்லை. மனதளவிலாவது சுதந்திரம் இல்லாமல் கலைஞன் ஒன்றும் படைக்கவும் முடியாது. அவ்வாறு படைப்பானாயின் அது வெறும் கோஷம். அதிகார அமைப்பில் தப்பிப் பிழைத்து, 'அங்கும் நோகாமல் இங்கும் நோகாமல்' கலை படைக்கலாம் எனச் சிலர் கருதுகிறார்கள். எவ்வளவு காலத்துக்கு? **'அன்னை இட்ட தீ'** நாடகத்துக்கே தடை. ஆயுதம் அரசியலைத் தீர்மானிக்கும் வரைக்கும் ஒன்றும் இயலாது.

அக்கம் பக்கம் தெரியாமல் சந்தோஷமாகக் கனவு காணலாம். அவ்வளவுதான். அல்லது அதிகாரத்திலுள்ளவர்களுக்கு விலை போகலாம்.

இவ்வளவும் எழுதுகிறபோது ஒரு கேள்வி எழுகிறது. இங்கிருக்கிற

→ 11

---

## வார்த்தை எழுத விடு

### தேவர் மகன்

தமிழ் நாட்டின் மறவர்களான தேவர்கள் பற்றிய திரைப்படம். தேவர் குலத்தைச் சேர்ந்த அண்ணன், தம்பி குடும்பங்களுக்கிடையிலான ''பங்காளிக் காய்ச்சல்'' பற்றிய சினிமா. வியாபாரத்தைக் கணக்கில் கொண்ட சகல அம்சங்களும் உள்ளன. ஆனால் இச் சினிமா ஏதோ ஒரு விதத்தில் வித்தியாசமாகப் படுகிறது. தமிழின் மிகச் சிறந்த நடிகர்களான **சிவாஜி கணேசனும், கமலஹாசனும்** நடித்திருக்கிறார்கள். தமிழின் வழமையான ரேவதி, நாசர், கௌதமி போன்றோர் இதில் வித்தியாசப் பட்டிருக்கிறார்கள். **சிறீராமும்** (ஒளிப்பதிவு) **இளையராஜாவும்** (இசை) சினிமாவை அழகுபடுத்தி உள்ளார்கள். தேவர் (சிவாஜி கணேசன்) இறக்கும் வரை இச் சினிமா நல்ல சினிமாவுக்கான அம்சங்களை கொண்டமைகிறது. பின் மகன் (கமலஹாசன்) ஆதிக்கம் செலுத்துகிற போது -இடையிடை நாயகனை நினைவூட்டிய போதும் - இச் சினிமா சரிகிறது.

### சலனம்

சினிமாவுக்கான இரு மாத இதழ். சென்னையிலிருந்து வெளியாகிறது. இப்பொழுதுதான் ஆறு இதழ்கள் கொண்ட ஒரு தொகுப்பாகப் படிக்கக் கிடைத்தது. சினிமா குறித்த பூரண பிரக்ஞையுடன் வெளிவருகிற இதழ் என்பதால் மிகுந்த ஆர்வத்தைத் தருகிறது. இதில் பின்வரும் விடயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. சார்லி சாப்ளின், லூயி புனுவெல், இங்மர் பெர்க்மன், ஸொல்தான் பாப்ரி, விக்டோரியோ டி சிகா, அகிரோ குரோசோவா போன்ற உலக சினிமா சாதனையாளர் பற்றிய கட்டுரைகள், ''தமிழ் சினிமா தமிழ் மக்கள்'' என தமிழ் சினிமா பற்றியும் தமிழ் மக்களின் ரசனை பற்றியும் சுவாரசியமான ஆய்வு, சர்வதேச திரைப்பட விழா பற்றிய குறிப்புகள், ''இந்திய சினிமா - ஒரு உற்று நோக்கல்'' எனும் தொடர் கட்டுரை என சலனம் இதழ்கள் தனது பக்கங்களை மிகப் பிரயோசனமாக நிரப்புகின்றது. சினிமா தொடர்பாக ஆர்வமுள்ள யாவருக்கும் பயன்படத்தக்க சஞ்சிகை இது. இலங்கையில் இது கிடைக்கக் கூடிய இடம்: VASANTHAM (PVT) LTD, S-44, 3RD FLOOR, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX, COL-11.

### உலகமெலாம் வியாபாரிகள்

ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் நாவல். ஏலவே இவரது இரு நாவல்கள் வெளிவந்துள்ளன. 1991 இல் வெளிவந்த நாவல் இது. சகுந்தலா கார்த்திகேயனைக் காதலிக்கிறாள். சகுந்தலா சிவனேசனை மணம் முடிக்கிறாள். சகுந்தலா, தங்கை மீனாவுக்குப் புத்திமதி சொல்ல அமெரிக்காவிலிருந்து மீண்டும் லண்டனுக்கு வருகிறாள். கார்த்திகேயனைக் காண்கிறாள். '' ஏன் நீர் எப்போது வரப்போகிறீர்? கணவன் விளங்காமற் கேட்டான். ''தெரியாது. தெரிந்தபின் சொல்வன் '' அவள் குரலில் நிம்மதி. திரும்பிப் பார்த்தாள். கடலுக் கப்பால் கார்த்திகேயன். ஒருநாள் திரும்பி வருவான் தானே? அவள் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டாள். என்று முடிகிறது இந்நாவல்.

இந் நாவல் வெறுமனே காதல், கல்யாணம் பற்றியதுதான் என வெளித் தெரியும். ஆனால் உள்ளே நிறைய செய்திகள் கொண்டது. ஈழத்தில் நடைபெறுகிற அரசியல் மாற்றம் லண்டனில் எதிரொலிக்கிறது. ஈழத்தில் தமிழ் மிதவாதத் தலைமைகள் நிராகரிக்கப்படுகிற போது லண்டனில் மிதவாதத் தலைமைகளுக்கு முட்டை எறியப்படுகிறது. தமிழர் வாழ்வு, அரசியலின் மறுபக்கத்தைப் பார்க்கக் கிடைக்கிறது. ராஜேஸ்வரி, நாவலை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆசிரியருரையில் அது பற்றிய குறிப்புகள் வேண்டாம்.

மகத்தான நாவல் என்று சொல்ல மாட்டேன்; நல்ல நாவல்.

சூர்யா

நன்றி - நூலகத்திட்டம்



# 83 கலவரத்தை தமிழராயிருந்தும் தடுக்கவில்லையே ?

- விக்டர் ஐவன்


**கேள்வி: முதன் முதலில் சிங்களத்தில் ஆரம்பிக்கப்பட்ட மாற்றுப் பத்திரிகை என்ற வகையில் தேசிய இனப் பிரச்சினை தொடர்பான எத்தகைய கருத்துக்களை எடுத்துச் சொல்வது அவசியம் எனக் கருதுகிறீர்கள்?**

பதில்: எமது பத்திரிகை சிங்கள மக்கள் மத்தியில் பெருமளவில் விற்பனையாவதற்கு ஒரு காரணம் நாம் மக்களுடைய அன்றாட அரசியல் பிரச்சினைகளை ஆழமாக தொட்டுக் காட்டுவது மட்டுமன்று, 83 கால கட்டத்தின் பின் இந்நாட்டு அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்கின்ற பிரச்சினையாக இனப் பிரச்சினை தலையெடுத்த பின்னர், தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு பற்றி பல முற்போக்கு சிங்களப் புத்திஜீவிகள் கூட மிகத் தவறான நிலைப்பாட்டை கொண்டிருக்கிறார்கள் என்பது வெளிப்படை. ஆனால் எம்மைப் பொறுத்தளவில் தமிழ் மக்களுடைய பிரச்சினைக்குத் தீர்வை முன் வைக்கிற போது சிங்கள சாதாரண மக்களை ஆத்திரமூட்டாத வகையில் அதே வேளை சிங்கள மக்களின் கலாசாரம் போன்றவற்றை எள்ளி நகையாடுவதைத் தவிர்த்து, மொழி, மதம் என்பனவற்றிற்கு அப்பாலும் மனிதர்கள் என்ற வகையில் தமிழ் மொழியைப் பேசுகின்ற மக்களின் தனித்துவத்தை நாம் எவ்வாறு அங்கீகரிப்பது அவர்களுடைய பிரச்சினைகளை எவ்வாறு புரிந்து கொள்வது என்பது பற்றி மிகப் பரந்து பட்ட முறையில் எடுத்துச் சொன்னதும் இதற்கு ஒரு காரணமாகும்.

அரசாட்சியில் இருந்தவர்கள் இனப் பிரச்சினைக்கு முன்வைத்த தீர்வுகளையோ தமிழ் மக்களுக்காகப் போராடிய இயக்கங்கள் முன்வைத்த தீர்வுகளையோ, ஏனைய சிங்களக் கட்சிகள், இனவாதக் குழுக்கள் முன்வைத்த தீர்வுகளையோ நாம் அப்படியே ஏற்றுக் கொள்ளவில்லை. அவை எப்போதும் ஒரு பக்கச் சார்பாகவே இருந்திருக்கின்றன. நாம் அதற்கும் அடுத்த கட்டத்திற்குப் போய் மனிதர்கள் என்ற பார்வையில் அவரவர் தாம் தாம் வாழும் பகுதியில் சுதந்திரமாகவும், பயமின்றியும் அதே வேளை அங்கு வாழுகின்ற இனங்களோடு பரஸ்பர நல்லெண்ணத்தோடு வாழுதல் என்ற வேலைத்திட்டத்தின் கீழ் (frame work)இப்பிரச்சினை அணுகப்பட வேண்டுமென்பதே எனது நோக்கமாகும். அதுவே நீண்ட காலத்தில் நிரந்தர சமாதானத்திற்கு வழிவகுக்கும் என்பதும் எனது நம்பிக்கையாகும்.

**கேள்வி: வடகிழக்கு இணைப்பு, சுயநிர்ணய உரிமை, தமிழ் முஸ்லீம் மக்களுக்கான அதிகாரப் பரவலாக்கல், மலையக மக்களின் பிரஜாவுரிமை போன்ற விடயங்களில் ''ராவய'' எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டு வெளிவருகிறது?**

பதில்: ''ராவய'' பத்திரிகையின் முதலாவது இதழிலேயே இனப் பிரச்சினை சம்பந்தமாக நாம் அணுகியிருந்தோம். இன்று வடகிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு ஒவ்வொருநாளும் வாழ்வா, சாவா என்ற போராட்டமே பிரதான பிரச்சினையாக இருக்கிறது. ஒரு சிறு குண்டு வெடிப்பு, மிகப் பெரிய அதிர்வலைகளைக் கொழும்பில் ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிற வேளையில் 300 கிலோ பாரமுள்ள குண்டுகள் 3000க்கு மேற்பட்ட தொகையில், இதே நாட்டின் இன்னொரு பகுதியில் கொட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று மிகச் சாதாரண மக்களுக்கு புரியக் கூடிய வகையில் நாம் எழுதி வருகிறோம். அதில் நாம் சொல்ல முயன்றது என்னவென்றால் அந்த மக்களுக்கு அவர்களது வாழும் பிரதேசத்திலேயே இன்று எதுவித உயிர்ப் பாதுகாப்புமற்ற நிலை உருவாகியிருக்கிறது என்பதேயாகும். அக் கட்டுரையில் நாம் தொடர்ந்து விளங்கப்படுத்த முயன்றது சரித்திரத்தைக் கிண்டியெடுத்து, சரித்திரத்தை ஆதாரமாக வைத்து தீர்வு தேடுவதை விடுத்து, நடைமுறையில் மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் ஆழமான ஆய்வுக்குட்படுத்தி இப் பிரச்சினைக்கான தீர்வை முன் வைக்க முயல வேண்டும் என்பதேயாகும். அந்த வகையில் தமிழ் மக்களின் பிரச்சினையில் சமஷ்டி முறையா? வடகிழக்கு இனணந்த சுயாட்சியா அல்லது பிரிந்த ஆட்சியா என்றெல்லாம் பார்ப்பதை விட அவர்கள் வாழுகின்ற அந்தப் பிரதேசத்தில் அவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்பதையே பிரதான பிரச்சினையாக நான் பார்க்கிறேன். அத்துடன் பெரும்பான்மையாக ஒரு மக்கள் வாழும் பிரதேசத்தில் சிறுபான்மையாக வாழ்பவர்கள் எவ்வாறு அப் பெரும்பான்மை மக்களின் வாழ்க்கைக்குப் பங்கம் ஏற்படாத வகையில் வாழ்வது என்பதைப் புரிந்து கொள்ளப் பழக வேண்டும்.



தென் பகுதியிலே சிங்களவர் மத்தியில் வாழும் தமிழ் மக்கள் அவர்களுடைய கலை, கலாசாரம், பண்பாட்டுக்கு மதிப்பளித்து வாழப் பழகிக் கொள்வது போல பெரும்பான்மையான தமிழர்கள் வாழும் வடகிழக்கில் வாழக்கூடிய சிங்களவர்கள் அந்த மக்களின் கலை, கலாசாரப் பண்பாடுகட்கும் அன்றாட வாழ்க்கைக்கும் பங்கம் ஏற்படாத வகையில் தாம் வாழப் பழகிக் கொள்வது மிகமிக அவசியமாகும். இவ் வழிமுறையே நீண்ட காலத்தில் இந்நாட்டிற்கு ஆரோக்கியமானது எனக் கருதுகிறேன்.

மற்றையது, இந்நாட்டை ஆளுகின்ற அரசு தமிழ் பேசுகிற எம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தாத அரசு என்று உணரப்பட்ட பின்னரே தமிழ் மக்கள் தமக்கான ஒரு அரசைப் பற்றிச் சிந்தித்தார்கள். அது தவறு அல்ல. ஒரு அரசு தேவையென்று வந்ததும் அதனை நிறுவுவதற்கான ஒரு நிலப்பகுதி தேவையென்பதும் அடுத்த கட்டத் தேவையாகி விடுகிறது. அந்த வகையில் அம் மக்கள் போராடத் தலைப்பட்டதும் சரியென்றே நான் கருதுகிறேன். நிலப் பிரச்சினையில் மிக மோசமாக அம் மக்களைப் பாதித்த விடயம்தான் அரசுகளினால் திட்டமிடப்பட்டு வடகிழக்குப் பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்கள் என்பது என்னுடைய கருத்தாகும். இது உடனடியாக நிறுத்தப்படுவது மட்டுமல்ல அக் குடியேற்றங்கள் அகற்றப்படவும்,அரசின் அவ்வாறான குடியேற்றத் திட்டங்களுக்கு சிங்கள மக்கள் எந்த வகையிலும் ஆதரவு கொடுக்காமலிருக்கவும் வேண்டும் என்பதையும் மிக அவசியமான ஒரு விடயமாக நான் பார்க்கிறேன்.

அதிகாரப்பரவலாக்கல் என்ற விடயத்தில் சிங்கள மக்களுக்கும் புத்திஜீவிகளுக்கும் நான் சொல்ல விரும்புவது இந்நாட்டின் சமாதானத்தைக் கருத்தில் கொண்டு இவ்விரு மக்களிடையேயுள்ள பயவுணர்வு நீக்கப்படும் வரை அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் சில விட்டுக் கொடுப்புகளை அனுமதிக்க தயாராக வேண்டும். இதனுடைய நோக்கம் இன்று மிக இறுகிப் போயுள்ள இப் பிரச்சினையைத் தளர்த்துவதேயன்றி மேலும் இறுக்கமடையச் செய்வதல்ல. தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய ஒரு அரசியல் சக்தியை உருவாக்க அவர்களுக்குப் பூரண சுதந்திரம் உண்டு என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறானதொரு பரந்த வேலைத்திட்டத்தினூடாக செயற்படும்போது தமிழ் மக்கள் வாழுகிற பிரதேசத்தில்,அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற அரசியல் சக்திகள், அப் பகுதியில் வாழுகின்ற ஏனைய சிறுபான்மை சமூகத்தவர்களுக்கு அவர்களது அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுமென்ற உத்தரவாதத்தையும், அதற்கு தாங்கள் எடுக்கக் கூடிய நடவடிக்கைகளையும் சிங்கள மக்களுக்கு மிகத் தெளிவாக முன் வைப்பது இங்கு மிக அவசியமாகும். எனவே முன் வைக்கப்படும் தீர்வின் அடிப்படையில் எந்த ஒரு இனத்தவரும் தேசத்தின் ஏதாவது ஒரு மூலைக்கு தள்ளி ஒதுக்கப்படுகிற நிலை தவிர்க்கப்பட்டு அவர்கள் வாழும் பிரதேசங்களிலேயே அவர்களுடைய பாதுகாப்பும், நல்வாழ்வும் உறுதிப் படுத்தப்பட வேண்டும். அது மட்டுமன்றி தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் சக்திகள் சிங்கள மக்களின் அடிப்படை உரிமைகள் அரசால் மீறப்படும் வேளைகளில் அம் மக்களுக்கு ஆதரவாக தவறாது குரல் கொடுக்கும் நிலையை பின்பற்றுவதனால் சிங்கள மக்களை இனவாத சக்திகள் பயன்படுத்தும் நிலையில் இருந்து மீட்டெடுக்க முடியும் என்பது எனது நம்பிக்கையாகும்.

நான் முன் வைக்கிற இக்கருத்துகள் நிரந்தரமாக இவ்விரு இனங்களும் பிரிந்து வாழ வேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. இப்படியான ஒரு வேலைத்திட்டத்தினூடாக செல்லும் போது இரு இனங்களுக்கிடையில் நம்பிக்கை ஏற்படும் வேளையில் அடுத்தடுத்து வருகின்ற பிரச்சினைகளை புரிந்து கொண்டு பக்குவமாக அணுகக் கூடிய வாய்ப்புகள் உண்டு. இதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்லலாம்.

1991ம் ஆண்டு திருமலையில் சில சிங்களக் கிராமங்களின் பாதுகாப்பு பிரச்சினை பற்றி நடந்த கலந்துரையாடல்களுக்கு நானும் சென்றிருந்தேன். அங்கு வந்திருந்த இராணுவ, பொலிஸ் அதிகாரிகளிடம் அந்த மக்கள் கேட்டதெல்லாம் தங்களுக்கு இராணுவ பாதுகாப்பு வேண்டுமென்பதாகும். நான் கேட்டேன் ''உங்களுக்கு இராணுவ பாதுகாப்பு தந்தால் மட்டும் போதுமா? இராணுவம் பாதுகாப்பு தரும்போதுதான் உங்களுக்குத் தெரியும் அது சிறைக்கூடமாக இருக்கும் என்று. நீங்கள் தனியாக அக் கிராமத்தை விட்டு செல்வதானால் இராணுவ பாதுகாப்பு அவசியமாகும். இங்கு சாத்தியப்படக் கூடியது என்னவென்றால், நீங்கள் அப் பகுதியில் இயங்குகின்ற இயக்கங்களோடு நல்லுறவை ஏற்படுத்துவதுதான். நீங்கள் அரசாங்கத்திற்கு எவ்வித தகவல்களையும் கொடுக்க மாட்டீர்கள் என்ற பூரண நம்பிக்கை அவர்களுக்கு ஏற்படுமானால் அவர்கள் உங்கள் உயிர்களுக்கு உத்தரவாதம் அளிப்பார்கள்''. ஆகவே இங்கு பரஸ்பர நம்பிக்கைதான் பிரதானமானதே ஒழிய இராணுவ பாதுகாப்பு அர்த்தமற்ற ஒன்றாகும்.

''ராவய'' சிங்களப் பத்திரிகை வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக வெளி வந்ததாக கூறுவர். முதலில் சஞ்சிகையாக வெளிவந்து தற்போது வாராந்தப் பத்திரிரியாக வெளிவருகிறது.



ஆசிரியர் விக்ரர் ஐவன் 1971 ஆயுதக்கிளர்ச்சியில் பங்கு கொண்டவர். இதனால் நீண்டகாலம் சிறையிலிருந்தவர். சிறையிலிருந்த காலத்திலேயே பத்திரிகை வெளியிடுகிற எண்ணம் தனக்கு ஏற்பட்டதாகக் கூறுகிறார் அவர்.

இன்னொரு விடயத்தையும் நான் கூற விரும்புகிறேன். ஒரு வெளிநாட்டு உயர் ஸ்தானிகர் வீட்டில் இன்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடந்த உண்மையான விடயம் இது; அக் கூட்டத்திற்கு வந்திருந்த நபர்களில் இரண்டு தமிழர்கள் இருந்தனர். அதில் ஒருவர் எனது மிக நெருங்கிய நண்பர். அவரது பெயரை குறிப்பிட நான் விரும்பவில்லை. இன்னொரு தமிழர் இன்றைய அரசியலில் மிக முக்கியமாக விளங்கும் திரு. க.......... அவர்கள்.

அன்றைய கலந்துரையாடலில் மதுபானம் பரிமாறப்பட்டது. எனது நண்பர் குடிப்பழக்கம் இல்லாதவர். ஆனால் க.......... ஓரளவிற்கு மதுவருந்தி போதைநிலையில் இருந்தார். அப்பொழுது நான் கேட்டேன், ''நீங்கள் நீண்டகாலமாக ஐக்கிய தேசியக் கட்சியில் இயங்கி வருகிறீர்கள். 1983ஆம் ஆண்டு காலகட்டத்தில் நடைபெற்ற இனக் கலவரத்தை நீங்கள் ஓர் தமிழராய் இருந்தும் உங்களால் தடுத்து நிறுத்த முடியவில்லையா? சிறில் மத்தியூவினுடைய இனவாத செயற்பாட்டிற்கு எதிராக நீங்கள் எதையுமே செய்யவில்லையா? அதற்குக் காரணம் நீங்கள் சிறில் மத்தியூவின் குடும்பத்தோடு மிக நெருங்கிய உறவு வைத்திருக்கின்றீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஒன்று; இப்படியான ஒரு இனவாதியோடு எப்படி நீங்கள் உறவு வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? இரண்டு; அப்படி நண்பராய் இருந்தும் ஏன் அதை தடுக்க முடியாமல் போயிற்று?''

அப்போது திரு. க........ சொன்னார்; ''அவரால் சிங்களத்தில் ஒரு கடிதம் கூட எழுத முடியாது. அப்படியிருக்க சிறில் மத்தியூ எப்படி புத்தகம் எழுதியிருக்க முடியும்? அதை யாரோ எழுத அதை சிறில் மத்தியூ தனது பெயரைப் போட்டுப் பிரசுரித்தார் என்பதுதான் உண்மை. சிறில் மத்தியூ ஓர் இனவாதியல்ல. சாதிரீதியாகத் தாழ்த்தப்பட்ட சமூகத்திலிருந்து அரசியலுக்கு வந்த சிறில் மத்தியூ தன்னை சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்திக் கொள்ள இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்பதே உண்மையாகும். அவருடைய அன்றாட வாழ்க்கையில் தமிழ் நண்பர்களோடு அன்னியோன்யமாகப் பழகுகின்ற ஒருவர்'' என்றார்.

நான் மேலும் சில கேள்விகளைக் கேட்டேன். ''1981ம் ஆண்டு யாழ்ப்பாண நூல் நிலையத் தீ வைப்பிற்கும் அங்கு நடந்த பல சம்பவங்களுக்கும் சிறில் மத்தியூ காரணகர்த்தாவாக இருந்தார் என்பதும், நீங்களும் அதற்கு உடந்தையாக இருந்தீர்கள் என்பதும் நான் கேள்விப்பட்டது. இது உண்மைதானா?''

அதற்கு அவர், ''அந்நேரம் கள்ள வாக்குகளைப் போடுவதற்காக நாம் போயிருந்தோம் என்பது உண்மை. ஆனால் நானோ, சிறில் மத்தியூவோ, காமினியோ அல்லது பெஸ்ரஸ் பெரெராவோ நூல் நிலைய எரிப்பில் சம்பந்தப்படவில்லை. அதைச் செய்தது ஹெக்டர் குணவர்த்தனா எனப்படுகிற பொலிஸ் அதிகாரிதான்.
அவர்தான் அதற்கு முழுப் பொறுப்பாளி. ஆனால் அதை எம்மால் தடுக்க முடியவில்லை என்பது உண்மை. அதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.''
அடுத்த கேள்வியாக நான்கேட்டது அப்படியாயிருந்தால் 1983 கலவரத்தில் சிறில் மத்தியூவுக்கு நேரடிப் பங்கு இருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்வீர்களா? என்று. அப்போது க........ சொன்னார்; ''1983 கலவரத்திற்கு நானும் பங்களிப்புச் செய்திருக்கின்றேன். நானும், சிறில் மத்தியூவும் மட்டுமல்ல; அரசோடு இருந்த எல்லா சிரேஷ்ட அரசியல்வாதிகளும் அக்கலவரத்தைப் பாவித்தார்கள். தமக்குத் தேவையானதைச் செய்து கொண்டார்கள். சிறில் மத்தியூ, பிரேமதாசா, காமினி, லலித் போன்ற எல்லோரும் அந்த நேரகாலத்தைப் பாவித்து தமக்குத் தேவையானவற்றைச் செயற்படுத்திக் கொண்டார்கள். ஆனால் நாங்கள் எவரும் யோசிக்கவில்லை இது இவ்வளவு சிக்கலைக் கொண்டு வரும் என்று. ஏனைய காலங்களைப் போன்று ஒரு சாதாரண கலவரமாக எழும்பி அடங்கிவிடும் என்றே கருதியிருந்தோம்.''
இதைக் கேட்டதும் நான் மிகவும் ஆத்திரப்பட்டு க.........விடம் கேட்டேன்; ''இப்படியான ஒரு கேவலமான செயலைச் செய்ய தமிழனான நீங்கள் எப்படி உடந்தையானீர்கள்?''

மீதி அடுத்த இதழில்

நன்றி - நூலகத்திட்டம்





சரிநிகர்
6, அலோ சாலை
கொழும்பு-3

## மீண்டும் எழும் இனவாதம்

வடக்கு கிழக்கில் 1990 இல் ஆரம்பித்த யுத்தம் இப்போது மூன்றாவது ஆண்டை நோக்கி நடை போட்டுக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு தொடங்கி இரண்டு மாதத்துக்குள்ளேயே அது நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் மக்களின் உயிரைக் குடித்து விட்டது.

புலிகளின் காடு, குகை, புலிகளின் கடற்படைப்பிரிவு என்ற பெயரால் அழிக்கப்பட்ட தமிழர் சொத்துக்களுக்கும் உடமைகளுக்கும் கணக்கில்லை.
இப்போது மட்டக்களப்பில் நெல் வயல்களுக்கு தீயிடுவதும் ஆரம்பித்துள்ளது.
மக்களின் அடிப்படைப் பொருளாதாரத்தையே முடக்கிப் போடுவதன் மூலம் வடக்குக்கிழக்கு முழுவதையும் ''வென்றுவர'' முடியும் என்ட அரசாங்கத்தின் சமீபத்திய முடிவு போல தோன்றுகிறது.
தெற்கிலோ பேச்சுவார்த்தை, சமாதானம் என்ற குரல்கள் மிகவும் மெலியதாகி, ஈனஸ்வரத்தில் ஒலிப்பதால் யாருடைய கவனத்தையும் ஈர்க்காத ஒன்றாகிப் போய்க்கொண்டிருக்கிறது.

யாழ் சென்று வந்த கிறிஸ்தவ பிதா வண. கென்னத் பெர்னாண்டோ முடிந்தளவுக்கு கேவலமாக திட்டப்பட்டார்.
தமிழ் மக்களின் உரிமைகளைப்பற்றிப் பேசுவது சிங்கள மக்களை எதிர்ப்பதாக அர்த்தம் கொள்ளப்படுகிறது.
''தேசியப்பத்திரிகைகள்'' என மகுடம் சூட்டிக் கொண்ட ஆங்கிலப் பத்திரிகைகள் மற்றும் சிங்களப்பத்திரிகைகள் தமிழெதிர்ப்பினை திட்டமிட்டு நடாத்துகின்றன.
சிங்கள இளம் சந்ததியினர் பாடப் புத்தகங்களாலும் கற்பிக்கும் ஆசிரியர்களாலும் தொடர்ந்து நஞ்சூட்டப்படுகின்றார்கள்.
ஒவ்வொரு தமிழனும் பண்டைய இந்தியப் படையெடுப்புகளின் வாரிசாகவோ எல்லாளனாகவோ சித்தரிக்கப்படுகின்றான். சிங்கள இளைஞர்களின் இலட்சியப் புருஷர்களாக துட்டகெமுனுவும் விஜயபாகுவும் கற்பிக்கப்படுகிறார்கள்.
இந்த இதழின் பக்கங்கள் 6,7இல் மாதிரிக்கு சில உதாரணங்கள் தரப்படுகின்றன. பெருமளவில் எழுதிக் குவிக்கப்படுகின்றனவற்றில் இருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட ஒரு சில துண்டுகளே இவை.
நாடு எங்கே போகிறது என்பது பற்றி யாருக்கும் அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை.
அரசின் குரல் புலி எதிர்ப்பாக மட்டுமே வெளிப்படுகிறதாக தோற்றம் காட்டுவது என்னவோ உண்மைதான்.
ஆனால், பரந்துபட்ட சிங்கள மக்கள் மத்தியில் புலிகள் மட்டுமல்ல முழுத் தமிழர்களுமே விரோதிகள் என்ற கருத்துப் பரப்பப்பட்டு வருகிறது.
இது திட்டமிட்ட வகையில் பரவலாக நடக்கிறது. இப்போக்கை எதிர்ப்பவர்கள் ''தேசபக்தர்களான'' தம்மை எதிர்க்கும் ''மேற்கத்தைய'' படிப்புப் படித்த ஏஜண்டுகளாக சித்திரிக்கப்படுகின்றனர்; நிராகரிக்கப்படுகின்றனர்.
புலிகளுக்கு தமிழ் மக்களின் விடுதலையை விட சிங்கள எதிர்ப்பும் தமிழ் மக்கள் தமக்கு என்றென்றைக்கும் அடக்கமாக இருக்கவேண்டும் என்பதும் முக்கியமாகப்படுவது போல,ஆட்சியாளருக்கு பிரச்சினை தீர்வதல்ல அது ''மூளாத் தீயாய் உள்ளே கனன்று'' கொண்டிருக்க வேண்டியதாய் உள்ளது. குளிர் காய்வதற்கு மட்டுமல்ல; பிழைப்பு நடத்தவும் அதுதானே அடிப்படை!

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்.
துணி வெட்டும் இயந்திரத்தில் துணி வெட்டிக் காட்டுவதை மக்களுக்கு காட்டியோ, எழுபதுகளில் ஸ்ரீமாவோவின் காலத்து நீண்ட கியூக்களை நினைவுபடுத்தி பூச்சாண்டி காட்டியோ நீண்டநாள் தாக்குப் பிடிக்க முடியாது.

ஆம்!

## தமிழரின் தாயகக் கோரிக்கை சிங்கள மக்களுக்கு இழைக்கும் அநீதி

- சிங்கள ஆரக்ச சபா.

சில தமிழ் அரசியல் வாதிகளைப் பொறுத்தவரை சமஷ்டி ஆட்சிமுறை ஒன்று தான் பிரச்சினையை தீர்க்கவுள்ள ஒரே வழியாகும். ஆனால் இந் நாட்டின் சிங்களவர்களோ, முஸ்லீம்களோ ஒரு போதும் சமஷ்டிக் கோரிக்கையை முன் வைத்ததில்லை என்பதை இங்கு குறிப்பிடப்படவேண்டும். இது சமஷ்டிக் கட்சியால் முன் வைக்கப்பட்ட ஒரு கோரிக்கை என்பது மட்டுமல்ல, அதன் தொடக்க காலத்திலிருந்தே இக் கோரிக்கை எதிர்க்கப்பட்டும் வந்துள்ளது. இதற்கான காரணங்களை நாம் ஏற்கனவே கூறியுள்ளோம். மக்களின் அபிலாசைகளில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய தீர்மானங்களை பெரும்பான்மையுடன் கலந்தாலோசிக்காமல் எந்த அரசியல்வாதியோ, கட்சியோ இனிமேல் எடுக்க முடியாது! 1987ன் நிகழ்ச்சிகள் இதற்கு உதாரணங்களாகும். அண்மைக்கால தொண்டமானின் முன்மொழிவுகள், இன்னொரு உதாரணமாகும். எனவே எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டியது சமஷ்டி மட்டுமே பிரச்சினையைத் தீர்க்கும் என தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பது எந்தப் பயனும் அற்றதே என்பதாகும்!

தமிழ் அரசியல்வாதிகள், நாட்டின் மொத்த சனத்தொகையில் 12.2% சனத்தொகையைக் கொண்ட தமக்கு நாட்டின் 1/3 பகுதியில் விசேட வாய்ப்புகளைக் கோரி அதனை தமது தாயகப் பிரதேசமாக கொண்டாடுவதும், சிங்கள குடியேற்றங்களை எதிப்பதும் 74%மான பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு அநீதியை விளைவிப்பதாகும். எந்த சிறுபான்மைக்கும் அநீதி இழைக்கப்படக்கூடாது என்று கூறும் அதே வேளை எத்தகைய தீர்வும் பெரும்பான்மையினரின் நலன்களை பாதிக்க கூடாது என்றும் நாம் வலியுத்த விரும்புகிறோம். எமது அபிப்பிராயத்தில் இனப் பிரச்சினையை தீர்க்கும் எந்தத் தீர்வும் பின்வரும் விடயங்களை அடிப்படையாக கொண்டிருக்க வேண்டும்.

1. முழு ஸ்ரீலங்காவும் அதன் அனைத்துப் பிரஜைகளதும் தாய் நாடாகும்.
2. இந் நாட்டின் சில பகுதிகளை தமக்கென விசேட உரிமை கொண்டாடவோ, மற்றைய இனங்களுக்கு இல்லாத சிறப்பு சலுகைகளையோ, உரிமைகளையோ கோரவோ எந்த ஒரு இனத்திற்கும் உரிமை கிடையாது.
3. எந்தத் தீர்வும் இப்போதோ பிறகோ நாட்டின் சுயாதிபத்தியம், சுயாதீனம், பிரதேச இறைமைப்பாடு என்பனவற்றிக்கு ஊறு செய்வதாக அமையக் கூடாது.
4. இந்த நாட்டின் பிரஜை ஒரு குறிப்பிட்ட இனத்தை சார்ந்தவர் என்பதற்காக எந்த அநியாயங்களுக்கும் அவர் உள்ளாக்கப்படக் கூடாது.

எமது பார்வையில் நியாயமான, நீதியான சமஷ்டியல்லாத ஒர தீர்வு மிக இலகுவில் காணப்படுவது சாத்தியமே. நிலமையை பூதாகரமாக காட்ட உருவாக்கப்பட்டுள்ள பொய்த்திரைகளை நாம் அகற்றி விட்டால் இது மிகவும் இலகுவானதாகும். உதாரணமாக தமிழ் பிரச்சாரவாதிகள், தமிழினம் மிகவும் மோசமாக கொடூரமும், இரத்த தாகமும் பிடித்த சிங்களப் பெரும்பான்மையினால் தாக்கப்பட்டு வருவதாகவும், இன அழிப்புக்குள்ளாகுவதாகவும், எனவே அவர்களை பாதுகாக்க தாம் 'பெரும்பான்மையான பிரதேசத்தில் அவர்கள் தம்மை தாமே கவனித்துக்கொள்ளும் ஒரு அதிகார அமைப்பு வழங்கப்படுவது அவர்களுக்கு உகந்தது என்றும் ஒரு படத்தை வெளியுலகிற்கு காட்டி வந்துள்ளனர். அதற்கு அவர்கள் 1983 கலவரத்தை உதாரணமாக காட்டுகின்றனர். ஆனால் உண்மையில் ஒரு சிலரால் நடாத்தப்பட்ட இந் நிகழ்ச்சிகளினால் - அவை விரிவாக ஆராயப்பட வேண்டும். - தமிழ் மக்கள் பாதிக்கப்பட்ட போதும் பெரும்பான்மையான தமிழர்கள், சிங்களவர்களால் பாதுகாக்கப்பட்டனர் என்பதும் உண்மையே. மேலும் அதன் பின் இந் நிகழ்சிகள் எதுவும் நடந்ததில்லை. இதற்குப் பின் கடந்த பத்தாண்டுகளில் பல ஆத்திரமூட்டும் நிகழ்ச்சிகள் - அரந்தலாவ பிக்குகள் கொலை, அநுராதபுர படுகொலைகள், சிங்கள ஆண்கள், பெண்கள், குழந்தைகள் பலரை கொன்றொழித்த வடக்கு, கிழக்கு கிராமங்களின் 'இனச் சுத்திகரிப்பு' நடவடிக்கைகள் நடந்த போதும் ஒரு தனிப்பட்ட தமிழராவது தாக்கப்பட்டதோ, மிரட்டப்பட்டதோ கிடையாது. அதாவது ஸ்ரீலங்காவில் தமிழர்களில் மூன்றிலொரு பகுதியினர் இப்போது முழுமையான பாதுகாப்புடன் சிங்களப் பெரும்பான்மை பகுதிகளில் சிங்களவர் மத்தியில் வாழ்கின்றனர்.

இந் நிலையில் ஒரு சமஷ்டி ஆட்சிமுறை எதற்காக அறிமுகப்படுத்தப்பட வேண்டும்? அதனால் தற்போது இல்லாத எந்த உரிமைகளை தமிழர்கள் பெற்றுவிடப் போகிறார்கள்?
''ஒரு மொழி, ஒரு தேசம் அனைவருக்கும் ஒரு தாய்நாடு'' என்பதே நாம் உண்மையில் எமது எதிர்கால சந்ததிக்கு ஒரு ஐக்கியமான அமைதியான ஸ்ரீலங்காவை கையளிக்க வேண்டுமானால் நாம் அமைத்துக் கொள்ள வேண்டிய அடிப்படையாகும்.

## The Island

ஐலண்டிலிருந்து இரண்டு கடிதங்கள்

உலகிலுள்ள அனைத்து நாடுகளும், பல்லினத் தன்மை வாய்ந்தவை. இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், ஸ்ரீலங்கா போன்றவையும் அவ்வாறே. பல இனங்கள் குடிப்பரம்பல், சட்டவிரோத குடியேற்றம், ஆக்கிரமிப்பு போன்றவற்றினூடாக பண்டைக் காலங்களில் இந்நாடுகளை தமது தாய்நாடுகளாக - ஸ்ரீலங்காவின் சிறுபான்மையினரைப் போல - ஆக்கிக் கொண்டுள்ளார்கள்.
ஆங்கிலேயர், ஜேர்மனியர், பிரெஞ்சுக்காரர், சிங்களவர் ஆகியோர் மட்டுமே மேற்குறிப்பிட்ட நாடுகளைத் தமது சொந்த நாடாகக் கொள்ள முடியும். பண்டைக் காலத்தில் ஸ்ரீலங்கா ''சிங்கள துவீப'' என்றே அறியப்பட்டிருந்தது.
கிறிஸ்தவ தேவாலயங்கள், கொடூரமான விடுதலைப் புலிகள் எமது மக்களை அழிப்பதிலும், தமது நீதியற்ற கோரிக்கைகளைப் பெற்றுக் கொள்ளவும் துணிந்து நிற்பதையும், அதிலிருந்து இராணுவம் மட்டுமே எம்மைக் காப்பாற்ற முடியும் என்பதையும் அறியுமா? ஆயுதப் படையினர், தமது கால்களை, உயிரை, ஏன் குடும்பங்களைக் கூட இழந்து இந்த யுத்தத்தில் வெல்வதற்காக மிகுந்த தியாகங்கள் ஆற்றியுள்ளதையும் அறிவர். ஆயினும் இக் கிறிஸ்தவ தலைவர்கள் நன்றியற்றவர்களாக தம்மை நிரூபித்து வருகிறார்கள்.
அண்மையில் வண. ஷெல்டன் டி சில்வா ''டெயிலி நியூஸ்''க்கு அளித்த தமது கிறிஸ்தவ செய்தியில் சயனைட்டை விழுங்கும் தற்கொலைக் கொலையாளிகளான புலிகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவர்கள் தமது ''இலட்சியத்திற்காக'' உயிர் விடுவதைப் பாராட்டுவது போல் தெரிகிறது. ஆனால் இந்த இலட்சியம் என்ன என்பது அவருக்குத் தெளிவாகத் தெரியும்.
ஸ்ரீலங்காவில் 1/3 பங்கை விழுங்குவது, 60 % மான நாட்டின் கரையோரப் பகுதியைக் கைப்பற்றுவது போன்ற தீர்மானங்களை எட்டு வீத தமிழர்களுக்காக - இவர்களில் 4 % பேர் சிங்களவர்களுடனேயே வாழ்கின்றனர் - நடைமுறைப்படுத்த முயல்வதே இலட்சியமாகும்.
திருமதி ஏ.எச். டி. குணசேகரா
28.01.1993 - ஐலண்ட்.

தமிழர்கள் சிங்களவர் வாழ்கின்ற தெற்கில் மத்திய மற்றும் மேற்கு மாகாணங்களிலேயே வட கிழக்கை விட அதிகளவில் வாழ்கிறார்கள். அவர்கள் தாக்கப்படவோ, வெளியேறும்படி கோரப்படவோ இல்லை. சிங்களவர்கள் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுமில்லை. இப்பிரதேசங்கள் தமது பாரம்பரிய பிரதேசமென கூறி அவர்கள் உரிமை கோரியதுமில்லை.

ஆனால் சிங்களவர் ஒரு விசித்திர விதியின் பயனால் இனவாதிகள் எனவும், பேரினவாதிகள் எனவும், வேறுபல பெயர்களாலும் அழைக்கப்படுகிறார்கள். இத்தனைக்கும் சிங்களவர் என்ன சொல்கிறார்கள் என்றால் இங்கு முழுத் தீவும் சிங்களவர்க்கு மட்டுமல்ல தமிழர், முஸ்லீம்கள், மலையகத்தவர், பறங்கியர் என இங்கு வாழும் அனைவருக்கும் சொந்தமானதெனக் கூறுகிறார்கள்.

27.01.1993 ஐலண்ட்

நன்றி - நூலகத்திட்டம்



# தமிழர் பிரச்சினையை இராணுவ ரீதியாக ஒழிக்க வேண்டும்

## இரண்டு சிங்கள ஆசிரியர்களுடனான பேட்டி

''சமாதானத்தின் தூதுவர்களா? அல்லது பரிநாசத்தை விளைவிப்பவர்களா?'' என்ற தலைப்பில் பிரவாத என்ற சஞ்சிகையில் சசங்க பெரேரா என்ற ஆய்வாளர் ஒரு ஆய்வுக்கட்டுரையை எழுதியுள்ளார். அவரது கட்டுரையில் இளம் மாணவ சமுதாயத்தின் மத்தியில் சிங்கள மொழி மூலம் கல்வி புகட்டும் ஆசிரியர்கள் எவ்வாறு ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்றும், அது இனத்துவப் பூசல் மேலும் சிக்கலடைவதற்கு எவ்வாறு உதவுகிறது என்றும் ஆராய்கிறார். அக்கட்டுரையை முழுமையாக வெளியிடுவதாக உத்தேசித்துள்ளோம். இங்கே அக் கட்டுரையிலுள்ள பத்தாம் வகுப்பிற்கு சமூகக் கல்வி கற்பிக்கும் இரண்டு ஆசிரியர்களிடம் எடுத்த பேட்டியைத் தமிழில் தருகிறோம். ஆ-ர்.

**கேள்வி: நீங்கள் கற்பிக்கும் வரலாற்றுப் பாடங்கள் நியாயமான அளவிற்குச் சரியானவை என நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?**

பதில்: அதைப் பற்றிச் சந்தேகமில்லை. பாடத்திட்டங்களும் பாடவிதானங்களும் மிகவும் திறமை வாய்ந்தவர்களாலேயே தயாரிக்கப் பட்டுள்ளன. இதற்கு மேலாக எமது வரலாற்றினைப் பொறுத்தவரையில் மிகவும் நம்பகரமான கைநூலாக நான் மகாவம்சத்தைப் பயன்படுத்துகிறேன்.

**கேள்வி: சிங்கள மக்களைப் போலவே தமிழர்களுடைய காலமும் இலங்கையில் பழமை வாய்ந்தது எனவும், எல்லோராலும் நம்பப்படுவது போல இந்தியாவின் வடக்கில் இருந்தல்லாமல் சிங்களவர்களும் தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்களே என்றும் நவீன ஆய்வுகள் தெரிவிக்கின்றனவே. அதை நீங்கள் அறிவீர்களா? சிங்களவர்களிலுள்ள நவந்தன, சாலகம போன்ற சாதிக்குழுக்கள் கேரளாவிலிருந்து 15ம் நூற்றாண்டில் வந்தவர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?**

பதில்: என்னுடைய 18 ஆண்டு கால ஆசிரிய வாழ்க்கையிலோ பல்கலைக் கழக மாணவனாக இருந்த காலத்திலோ இப்படியானதொரு கட்டுக்கதையை நான் கேள்விப்படவில்லை. சிங்களவர்களே இங்கு முதலில் வந்தவர்கள். நீண்ட காலத்தின் பின் இங்கு வந்தவர்களே தமிழர்கள். பல வரலாற்றாசிரியர்களைப் போலவே மகாவம்சமும் இவ்விடயம் குறித்து தெளிவாகக் கூறுகிறது. சிங்களவர் எப்போதும் வட இந்தியாவில் இருந்து வந்தவர்களே ஒழிய ஒருபோதும் தென்னிந்தியாவில் இருந்து வந்தவர்களல்ல. எங்காவது ஓரிரண்டு திருமணக் கலப்புகள் நடந்திருக்கக் கூடுமாயினும் அது ஒரு போக்காக இருந்ததில்லை. சமூக கல்வியை கற்பிக்கத் தொடங்கு முதல் நான் ஒரு சரித்திர ஆசிரியனாக இருந்தேன். ஆகவே இது எனக்கு நன்றாகவே தெரியும். இப்போது நீங்கள் குறிப்பிடுகின்ற இத்தகைய கருத்துகளும் தத்துவங்களும் சுத்தமான தமிழர் பிரச்சாரம் மட்டுமல்லாமல் மேற்கத்தேயப் படிப்புப் பின்னணியைக் கொண்டவர்களே அதை அப்படியே ஏற்றுக் கொள்கின்றனர். (இக்கடைசி வசனம் என்மீதும் என் போன்ற சமகால மேற்கில் படித்த சமூகவியலாளர் மீதும் வைக்கப் பட்ட நேரடித் தாக்குதலாகும். எம் போன்றவர்களைப் பொதுவாக ''துப்பாஹியாஸ்'' (எந்தக் கலாசாரமும் அற்றவர்களைக் குறிக்கும் வகைச் சொல்) என அழைக்கின்றனர். இத்தகைய சமூகவியலாளர்கள் சிங்கள மொழிக் கல்வி கற்ற தேசியவாதிகளது தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு உள்ளாகி வருகின்றனர். ஏனென்றால் அவர்களது எழுத்துக்கள் சிங்களப் பேரினவாதத்தைத் தாக்குவதாக அமைந்துள்ளதே.)

**கேள்வி: சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையில் தொடர்ச்சியான பிரச்சினை இருந்துள்ளதாக வரலாறு கற்பித்தால் சமகாலத்தில் இனங்களுக்கிடையிலான உறவைப் பாதிக்கும் என நீங்கள் கருதவில்லையா?**

பதில்: நாம் எப்போதும் தமிழர்களால் பிரச்சினைகளை எதிர் நோக்கி வந்துள்ளோம். அது மட்டுமல்லாது இப் பிரச்சினைகள் அவர்கள் இல்லாது போகும் வரை (Until we get rid of them)இருந்து கொண்டுதான் இருக்கும். இத்தனைக்கும் எங்களுக்கு வேறு போக்கிடம் கிடையாது. அவர்களுக்கோ தமிழ் நாடு இருக்கிறது. மேலும் என்ன பாதிப்புகள் ஏற்பட்டாலும் எமது இளம் சந்ததியினருக்கு அவர்களது மூதாதையர்கள் செய்த தியாகங்களைக் கற்பிக்காமல் இருக்க முடியாது. நாம் அவர்களுக்கு எமது பொலிஸ், இராணுவம் ஆகியவற்றின் தியாகங்கள் துட்டகைமுனு, முதலாம் விஜயபாகு ஆகியோரின் தியாகங்களுக்கு ஈடானவை என்று தெரிவிக்க வேண்டும்.

**கேள்வி: அரசியல் பேச்சுவார்த்தையே இராணுவ வழியை விட இப்பிரச்சினையைத் தீர்க்க உகந்த வழி என நீங்கள் கருதவில்லையா?**

பதில்: நான் எப்போதும் எனது மாணவர்களுக்கு கூறுவது அரசியல் தான் எங்களைப் பழுதாக்கி விட்டது என்பதே. நாங்கள் இராணுவரீதியாக இப்பிரச்சினையை இல்லாது ஒழிக்க வேண்டும். ஒருகால் அவர்கள் தோற்கடிக்கப்பட்ட பின் அவர்களது குறைகளைப் பற்றி யோசிக்கலாம். பிரச்சினையே, அவர்கள் எப்போதும் தமக்குரியதை விட அதிகமாகக் கோருவதேயாகும். இத்தனைக்கும் நாம் பெரும்பான்மையாகவும் முதலில் நாட்டுக்கு வந்தவர்களாகவும் இருக்கிறோம்.

**கேள்வி: சமூகக் கல்வியில் வரும் சரித்திரப் பாடங்களுக்கு மேலாக சமகால இனப்பிரச்சினை தொடர்பாக உங்கள் கருத்துக்களை நீங்கள் மாணவர்களுக்குத் தெரிவிப்பதுண்டா?**

பதில்: ஆம், எப்போதும் ஒரு ஆசிரியன் என்ற வகையில் அது எமது கடமை.

**கேள்வி: மற்றைய ஆசிரியர்கள்....**

பதில்: அவர்களும்தான், நான் முதலில் சொன்னது போல இது அவர்களது கடமையாகும்.

**கேள்வி: இங்குள்ள சிலர் நீங்களும், வேறுசில ஆசிரியர்களும் 83இல் தமிழர்களுக்கெதிரான தாக்குதலில் ஈடுபடுமாறு மாணவர்களைத் தூண்டியதாகக் கூறுகின்றனர். சில ஆசிரியர்கள் இனவாதிகள் என்றும் கூறுகின்றனர்?**

பதில்: சுத்தமான பொய். மார்க்சிஸ்டுகளும், மேற்கத்தேய படிப்புப் படித்த ''துப்பாஹியாஸ்''களும் தான் எல்லாத் தேசாபிமானிகளையும் இனவாதிகள் என்று கூறுகின்றனர். அவர்கள் துட்டகைமுனு மன்னரையும், அனாகரீக தர்மபாலாவையும் இனவாதிகள் என்கின்றனர். நான் ஒருபோதும் யாரையும் தாக்கவோ,கொல்லவோ எனது மாணவர்களிடம் கூறியதில்லை. நாங்கள் பௌத்த சமயத்தவர்கள். ஆனால் தேவை ஏற்படும்போது எமது நாட்டிற்காக எமது மாபெரும் தலைவர்களைப் போல் சுயமாக முன் வந்து போராட எமது மாணவர்கள் தயாராக இருக்க வேண்டும்.

**கேள்வி: ஆகவே, மாணவர்களை உங்களுக்கு விருப்பமான வழியில் செல்ல உங்கள் செல்வாக்கை பயன்படுத்துவது சரியென நினைக்கிறீர்கள்...**

பதில்: ஆம், அது உண்மையான ஆசிரியர்களது கடமை. ■

---

**கேள்வி: நீங்கள் கற்பிக்கும் சரித்திரப் பாடங்கள் மிகவும் சரியானவை என்பதைக் குறித்து உங்களுக்கு எத்தகைய சந்தேகங்களுமில்லையா?**

பதில்: பொதுவாகச் சொன்னால் இவற்றின் சரியான தன்மை ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவே உள்ளது. ஆனால் அண்மைக்கால ஆய்வுகளின் பின் கண்டுபிடிக்கப்பட்ட முடிவுகளுள் ஒன்றான இளவரசன் விஜயனின் பேரனார் ஒரு இலங்கையரே என்பது இப்பாடங்களில் சேர்க்கப்பட வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அது சரித்திரப் பாடத்தை மேலும் ஆர்வமுள்ள தாக்குவதோடு நாம் மகாவம்சத்தை குருட்டுத்தனமாக பின்பற்ற வேண்டியதில்லை என்பதையும் காட்டும்.

**கேள்வி: நீங்கள் மகாவம்சம் குறிப்பிடும் விஜயன் தொடர்பான கதையை அர்த்தமுள்ளதாகக் கொள்ளமுடியாது. அது கட்டுக்கதை. இக் கட்டுக் கதையின் புதிய வடிவம் இலங்கைக்கெதிரான இந்திய ஆக்கிரமிப்பினைக் குறித்ததாக மாற்றப்பட்டுள்ளது என்பதே இன்றைய விவாதமாகும்....**

பதில்: நீங்கள் இப்படி மேலெழுந்த வாரியாக இதனை நிராகரித்துவிட முடியாது. இந்தப் புதிய வரலாற்று முடிவுகளைப் பற்றிய அறிக்கையை நீங்கள் படித்ததுண்டா?

**கேள்வி: இல்லை, நான் அதை எங்கே படிப்பது?**

பதில்: அது எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்தது.நீங்கள் சிங்கள வரலாற்றாசிரியர்களால் எழுதப் பட்டவற்றை வெறும் கட்டுக்கதை என்று கூறுவதற்கு முதல் இவற்றைப் படித்திருக்க வேண்டும்.

**கேள்வி: சமூகக் கல்வி பாடங்கள் தொடர்பான விடயங்களுக்கு மேலாக இனப்பிரச்சினை தொடர்பான உங்கள் அபிப்பிராயத்தை மாணவர்களுக்கு கூறுவதுண்டா?**

பதில்: ஆம், உண்மையிலேயே இந்தப் பிரச்சினை எங்கள் எல்லோரது மனசையும் தொடுகிற பிரச்சினை. உண்மையான தேசாபிமானிகள் என்ற வகையில் எமது இளம் சந்ததியினருக்கு இப் பிரச்சினை எவ்வாறு தொடங்கியது எனத் தெரிவிப்பது எமது கடமையாகும். தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் உண்டு. அவை கட்டாயம் தீர்க்கப்பட வேண்டும். ஆனால் அவர்கள் தங்கள் கோரிக்கைகளை நடைமுறைச் சாத்தியமானதாக முன் வைக்க வேண்டும். இது எங்களுடைய நாடு. சிங்களவர்களே இந் நாட்டிற்கு முதலில் வந்தவர்கள். அவர்கள் (தமிழர்கள்) இது பிரிக்கப்பட வேண்டும் என்று எதிர் பார்க்கக்கூடாது. மறுபுறத்தில் நாங்கள் பெரும்பான்மையினராக இருப்பதால் நாட்டின் வளங்களைப் பகிரும் போது எமக்கே பெரும் பங்கு கிடைக்க வேண்டும்.

**கேள்வி: பாதுகாப்புப் படையினர் தமிழ்ப்பிரதேசங்களில் செய்து வரும் சேவைகள் சிறப்புற அமைந்துள்ளதாகக் கருதுகிறீர்களா?**

பதில்: ஆம், அங்கு குறைந்த இறப்புகளே ஏற்பட்டுள்ளன. ஆனால் ஒரு யுத்தத்தில் இவை ஏற்படத் தான் செய்யும். அவர்கள் (தமிழர்கள்) யுத்தத்தைத் தொடங்கினார்கள். அவர்கள் தான் இதை நிறுத்த வேண்டும்.

**கேள்வி: அநுராதபுரம், கென்ட், டொலர் பண்ணைகளில் நடந்த அழித்தொழிப்பு உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா?**

பதில்: ஓமோம். எப்படி ஒருவனால் அதை மறக்க முடியும்? என்னுடைய பக்கத்து வீட்டாரின் உறவினர் ஒருவர் கூட பெற்றாக் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார். எயார் லங்கா ஜெட் விமானத்தையும் தொலை தொடர்பு பரிவர்த்தனை நிலைய அலுவலகத்தையும் தமிழர்கள் குண்டு வைத்து தகர்த்த போது நீங்கள் இந்த நாட்டில் இல்லாமலிருந்திருக்கலாம். பெருமளவு மக்கள் -எமது மக்கள் - இத் தாக்குதல்களில் கொல்லப்பட்டார்கள். (பல சிங்களவர்கள் என்னிடம் இதைப்பற்றித் தெரிவித்துள்ளார்கள். ஆயினும் இதை உறுதிப்படுத்துவதற்கான எந்தத் தகவல்களையும் பெற முடியவில்லை.- கட்டுரையாசிரியர்)

பயங்கரவாதிகள் தாக்குதலுக்கு முன்பாக அப்பிரதேசத்திலுள்ள தமிழர்களை வெளியேறுமாறு எச்சரித்திருந்தார்கள். எமது மாணவர்களில் சிலர் இத் தாக்குதலுக்குப் பின் இவற்றைக் கவனித்திருந்தார்கள். அந்நாட்களில் இதைப் பற்றித்தான் நாமெல்லோரும் பேசிக் கொண்டிருந்தோம். ஒவ்வொருவரும் பெரும் கோபத்துடனிருந்தோம். சில மாணவர்கள் எனது பாடசாலையிலுள்ள சில தமிழ் ஊழியர்களைத் தாக்கவும் செய்தார்கள். நான் ஒரு வன்முறையாளன் அல்ல. ஆயினும் இம் மாணவர்களில் குற்றம் காண என்னால் முடியவில்லை. நீங்கள் அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள வேண்டும். கொல்லப்பட்டவர்கள் வேறு யாருமல்ல அவர்களது மக்கள்.

**கேள்வி: பாதுகாப்புப் படையினரால் முற்றாக அழிக்கப்பட்ட தமிழ்க் கிராமங்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பதில்: ஆம், ஆனால் அவை யுத்தத்தில் தவிர்க்க முடியாத தொடர்ச்சிகள். அத்துடன் வடக்கிலிருந்து வரும் பெரும்பாலான இராணுவ தாக்குதல் பற்றிய கதைகள் மிகைப் படுத்தப்பட்டவையாகும். இராணுவத்திலுள்ள சிலரிடம் இது பற்றி விசாரித்துள்ளேன். அவர்கள் அப்படி ஏதும் நடக்கவில்லை என்று தெரிவிக்கிறார்கள்.

**கேள்வி: உங்கள் மாணவர்கள் மத்தியில் உங்களுக்குப் பெருமளவு செல்வாக்கு இருப்பதாக அறிகிறேன். இத்தகைய செல்வாக்கு ஒரு பயனுள்ளதென கருதுகிறீர்களா?**

பதில்: அவர்களுக்கு பாதை ஒன்று காட்டப்பட வேண்டும். அது எமது கடமை. ■

நன்றி - நூலகத்திட்டம்



# தேசிய விடுதலைப் போராட்டம் ஓர் மீளாய்வை நோக்கி.... 13

**அன்னபூரணா**

## தமிழீழம் என்பது வெறுமனே ஒரு பெயரல்ல

முன்னைய தமிழ் ஈழ விடுதலை இயக்கம் ஒரு வருடமே உயிர் வாழ்ந்திருந்தது. அந்த ஒரு வருடத்திலும் அது அரசியல் ரீதியாக மேற்கொண்ட பல நடவடிக்கைகள் தேசியப் போராட்ட வரலாற்றில் உந்துசக்தியாகவும், வளர்ச்சிப் படியாகவும் விளங்கியிருந்தது. அந் நடவடிக்கைகளில் தமிழ் ஈழம் என்ற பெயரை முதன் முதலில் பயன்படுத்தியமை, தேர்தலுக்கு எதிரான பிரச்சாரங்களை முன்னெடுத்தமை, பிரச்சாரங்களை வகுப்பு வடிவத்திற்கு மாற்றியமை, இனப்பிரச்சினையை இடதுசாரிக் கண்ணோட்டத்தில் நோக்கியமை என்பவை முக்கியமானவையாக விளங்கின.

### தமிழ் ஈழம் என்ற பெயரை முதன்முதலில் பயன்படுத்தியமை:

தமிழ் ஈழ விடுதலை இயக்கமே முதன் முதலில் தமிழ் ஈழம் என்ற பெயரை பயன்படுத்தியது. இத் தமிழ் ஈழம் என்பது வெறுமனே ஒரு பெயரல்ல. அது ஒரு தேசிய இனத்தை பிரதேசரீதியாக அடையாளம் காணுவதற்கு உதவுகின்ற ஒரு சொற்பதம். இப் பெயரினூடாக ஒரு தேசிய இனத்தின் தேசிய உணர்வு அடையாளப்படுத்தப்பட்டது. பிரதேசரீதியாகவும், மாவட்டரீதியாகவும் பிளவுபட்டிருந்த மக்களை ஒரு தேசிய இனமாக தம்முள் இணைப்பதற்கு உதவுகின்ற சொற்பதமாகவும் இது காணப்பட்டது. தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினர் தமது அமைப்பை உருவாக்கும் போது இதை நன்கு உணர்ந்து ஒரு பிரதேசத்தினூடாக தம்மை அடையாளம் காணும் வகையில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் என தமது அமைப்பிற்கு பெயரிட்டனர் தமது அமைப்புப் பணிகளை மேற்கொள்ளும் போது தமிழ் பிரதேசங்களை குறிப்பதற்கு தமிழ் ஈழம் என்பதையும் இலங்கையின் ஏனைய பகுதிகளை குறிப்பதற்கு சிறீலங்கா என்ற பெயரையும் பயன்படுத்தினர். அவர்களால் வெளியிடப்பட்ட 'எரிமலை' பத்திரிகையிலும், கடிதத் தொடர்புகள் என்பவற்றிலும் இவ்வாறே பயன்படுத்தினர். இவர்கள் பயன்படுத்த ஆரம்பித்த தன் பின்னர்தான் புலிகளும், கூட்டணியினரும் தமிழ் ஈழம் என்ற பதத்தினை பிரயோகிக்கத் தொடங்கினார்கள். புலிகள் 1974 இல் தமது அமைப்பினை உருவாக்கியபோது 'புதிய தமிழ்ப் புலிகள்' என்று பெயரிட்டார்களே தவிர தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் எனப் பெயரிடவில்லை. கூட்டணியினர் தமது வட்டுக்கோட்டை மாநாட்டின் மூலமே தமிழ் ஈழம் என்ற பெயரை உத்தியோகரீதியாக பயன்படுத்தத் தொடங்கினர்.

> ❝ தமிழ் ஈழம் என்பது வெறுமனே ஒரு பெயரல்ல. அது ஒரு தேசிய இனத்தை பிரதேச ரீதியாக அடையாளம் காணுவதற்கு உதவுகின்ற ஒரு சொற்பதம். இப் பெயரினூடாக ஒரு இனத்தின் தேசிய உணர்வு அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. பிரதேச ரீதியாகவும் மாவட்ட ரீதியாகவும் பிளவுபட்டிருந்த மக்களை ஒரு தேசிய இனமாக தம்முள் இணைப்பதற்கு உதவுகின்ற சொற்பதமாகவும் இது உள்ளது ❞

### தேர்தல்களுக்கு எதிரான பிரச்சாரங்களை முன்னெடுத்தமை:

தேர்தல் என்பது மக்களை கட்சிரீதியாகவும், சாதிரீதியாகவும் கூறுபோடுவதற்கு உதவுகின்ற ஒரு நடவடிக்கையாகும். இத் தேர்தல்கள் இருக்கும் வரை தமிழ் மக்களை ஒரு பொதுத் தேசியத்தின் கீழும், பொதுக் கோரிக்கையின் கீழும் இணைக்கமுடியாது. மக்கள் அனைவரினதும் ஆற்றலை எதிரியை நோக்கி திரட்டவும் முடியாது. இதனை தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினர் தமிழர் கூட்டணியிலும், தமிழரசுக்கட்சியிலும் அனுபவரீதியாக உணர்ந்திருந்தனர். இதனால் அமைப்பு உருவாக்கப்பட்ட ஆரம்பகாலம் தொட்டு தேர்தல்களுக்கு எதிரான பிரச்சாரங்களை மேற்கொண்டனர். பிரச்சாரத்தினை மேற்கொள்ளும் போது தேர்தல் என்பது எம்மைக் கூறுபோடவும், எமது போராட்டத்தை திசை திருப்பவும் எதிரியால் உருவாக்கப்பட்ட சூழ்ச்சி என்றும் நாம் அச் சூழ்ச்சிக்குப் பலியாகி விடக் கூடாது என்றும் பிரச்சாரம் செய்தனர். தமது பிரச்சாரத்துக்கு உதாரணமாக 1975 இல் நடைபெற்ற காங்கேசன்துறை இடைத்தேர்தலை எடுத்துக் காட்டினர். அத் தேர்தலில் சுமார் ஒன்பதாயிரம் வாக்குகள் வரை தமிழரசுக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட செல்வநாயகத்திற்கு எதிராக விழுந்தது. இவ் ஒன்பதினாயிரம் வாக்காளர்களும் தமிழ் ஈழத்திற்கு எதிரானவர்கள் அல்ல என்றும் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் போட்டியிட்ட வி.பொன்னம்பலத்தின் மீது தனிப்பட்ட பற்று காரணமாக அல்லது செல்வநாயகத்தின் மீதான தனிப்பட்ட வெறுப்பு காரணமாக அவ்வாறு வாக்குகளை அளித்திருக்கலாம் என்றும் கூறினர். இங்கு தேர்தல்கள் தமிழ்மக்களை ஒற்றுமைப்படுத்துவதற்குப் பதிலாக அவர்களை கூறுபோட்டு சிதைக்கின்றது என்றும் கூறினர். எங்களுக்கு தேர்தல்கள் முக்கியமல்ல தமிழ் ஈழமே முக்கியம். எனவே தமிழ் ஈழத்தைப் பலவீனப்படுத்துகின்ற தேர்தல்களை தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்றும் கூறினர். அத்தோடு ஸ்ரீலங்கா பாராளுமன்றத்துக்குச் சென்று தமிழ் ஈழத்தைப் பெற்றுவிடமுடியாது என்றும், தேர்தல் மூலம் பெற்றுக் கொள்கின்ற பாராளுமன்ற உறுப்பினர் பதவியால் எந்தவித பயனும் கிடைக்கப் போவதில்லை என்றும் பிரச்சாரம் செய்தனர்.

இவர்களால் தொடக்கிவைக்கப்பட்ட தேர்தலுக்கு எதிரான பிரச்சாரமே பிற்காலத்தில் உருவான அமைப்புக்கள் எல்லாம் தேர்தலை பகிஷ்கரிப்பதற்கு காரணமாக அமைந்தது. பிற்கால அமைப்புகள் பிரச்சாரம் மூலம் தேர்தலை நிறுத்த முடியாமல் இருந்த போது ஆயுதம் மூலமாவது தேர்தலை நிறுத்த முனைந்தனர். இதன் வெளிப்பாடாகவே 1981 இல் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தலை புளொட் இயக்கம் ஆயுத நடவடிக்கை மூலம் நிறுத்துவதற்கு முனைந்தது. 1981 இல் யாழ் நாச்சிமார் கோவிலடி பிரச்சாரக் கூட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தேர்தலை நிறுத்த வேண்டும் என்பதற்காக புளொட் இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும்.

### பிரச்சாரங்களை வகுப்பு வடிவத்திற்கு மாற்றியமை:

இதுவரைகாலமும் தமிழ் அமைப்புகள் பாரியளவிலான பிரச்சாரக் கூட்டங்களையும் கருத்தரங்குகளையுமே பிரச்சார வடிவத்திற்கு ஏற்ற ஊடகமாக பயன்படுத்தினர். இப் பிரச்சார வடிவங்கள் எல்லாம் மக்களிற்கு கருத்துகள் போவதற்கு பயன்பட்டதே தவிர முன்னணியினரைத் திரட்டிக் கொள்வதற்கும் அவர்களுக்கு தொடர்ச்சியான அறிவு ஊட்டுவதற்கும் பயன்படவில்லை. முன்னணியினரை திரட்டிக்கொள்வதற்கு ஒரே வழி வகுப்பு வடிவம் தான் என்பதை இவர்கள் உணர்ந்துகொண்டனர். இது தொடர்பில் ஜே.வி.பி யின் ஐந்து பிரதான விரிவுரைகள் என்பதினாலும் இவர்கள் கவரப்பட்டவர்களாக இருந்தனர். ஜே.வி.பி யினரைப் போல் ஒழுங்குபடுத்தப்பட்ட விரிவுரைகளாக அவை இல்லாத போதும், தமக்குத் தெரிந்த விடயங்களை வகுப்பு வடிவத்தில் கொடுக்க முன்வந்தனர். வகுப்புகளுக்கு தயார்படுத்துவதற்காக தாங்களும் படிப்பதில் கவனம் செலுத்தினர். வகுப்புகளில் தோழர்கள் கேட்கின்ற வினாக்களுக்குப் பதில் அளிக்க வேண்டும் என்பதற்காக புதிய புதிய விடயங்களை எல்லாம் ஆராயத் தலைப்பட்டனர். வகுப்புகள் ஏன் தமிழ் ஈழம் தேவை, தமிழர் போராட்ட வரலாறு, தமிழ் ஈழப் பிரதேசங்களில் குடியேற்றங்கள் என்கின்ற வெவ்வேறு தலையங்கங்களில் நடாத்தப்பட்டன. அத்தோடு முன்னணி தோழர்கள் மத்தியில் சிறிய சிறிய கலந்துரையாடல்களையும் நடாத்தினர். பிரான்சீஸ், சந்திரமோகன், குமரன், தங்கமகேந்திரன் என்போர் இப் பணி தொடர்பில் முன்னணி வகித்தனர். ஏன் தமிழ் ஈழம் தேவை என்ற வகுப்பில் தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்பதற்காகவே நசுக்கப்பட்டுவந்தார்கள் என்றும் இந்நசுக்குதலிலிருந்து விடுபட்டு எமது சொந்த தேசத்தை அபிவிருத்தி செய்யவும், சொந்த கலாசாரத்தை அபிவிருத்தி செய்யவும் எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கவும் தமிழ் ஈழம் தேவையெனக் கூறினர். தமிழர் போராட்ட வரலாறு பற்றி கூறும் போது காலம் காலமாக தமிழ்த்தேசிய இனம் எவ்வாறு ஏமாற்றப்பட்டுவந்தது என்பதை சுட்டிக்காட்டினார்கள். குடியேற்றங்கள் பற்றி கூறும்போது எந்தெந்த தந்திரோபாய வழிகளையெல்லாம் பின்பற்றி குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றது இக் குடியேற்றங்கள் தமிழ்த்தேசியத்தை உடைப்பதற்கு மேற்கொள்ளப்படுகிற சதிமுயற்சி என்றும் கூறினர். அதுவும் திருகோணமலையில் குடியேற்றங்களை துரிதப்படுத்துவதற்கு காரணம் வடக்கு - கிழக்கு நிலத்தொடர்ச்சியைத் துண்டிப்பதற்கே என்றும் கூறினர்.

இவர்கள் தொடக்கிவைத்த இந்த வகுப்புவடிவங்களையே பிற்காலங்களில் வந்த இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் மேற்கொண்டனர். ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈரோஸ், புளொட் போன்ற இயக்கங்களில் முன்னணியினரை திரட்டுவதற்கு பிரதான வடிவமாக இவ்வகுப்புவடிவமே பயன்படுத்தப்பட்டது. ஈ.பி.ஆர்.எல்.எப். இது தொடர்பில் ஒழுங்கு படுத்தப்பட்ட வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

### தேசிய இனப்பிரச்சினையை இடதுசாரிக் கண்ணோட்டத்தில் நோக்கியமை:

தேசிய இனப்பிரச்சனையை இடதுசாரிக் கண்ணோட்டத்தில் முதன் முதலில் நோக்கியவர்களும் இவர்களேயாவர். இவர்கள் அவ்வாறு நோக்கினார்கள் என்பதை விட நோக்குவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் என்றே கூற வேண்டும். இவர்கள் தமது பிச்சாரங்களுக்காக கிராமங்களை நோக்கிச் சென்ற போது அங்கு இடதுசாரிக்கட்சிகளின் உறுப்பினர்களையும் சந்திக்க நேரிட்டது. அதுவும் குறிப்பாக வடமராட்சிக் கிராமங்களில் சண்முகதாசனின் தலைமையிலான சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களை சந்திக்க நேரிட்டபோது அவர்கள் இவர்களை நோக்கி சரமாரியான கேள்விகளை தொடுத்தனர். தமிழ் சோறுபோடுமா? ஏன் மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்? ஆண்ட பரம்பரை மீண்டும் ஆள்வதால் தமிழர்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிடுமா? என்கின்ற கேள்விகளை எல்லாம் கேட்கத்தொடங்கினர். இக் கேள்விகளுக்கு விடைகளைக் காண்பதற்காக இவர்கள் மார்க்சிய நூல்களையும் தேடித்தேடி படிக்க ஆரம்பித்தனர். தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக லெனின், ஸ்ராலின் என்போர் எழுதிய நூல்களை ஆர்வமாக படித்து விளங்கிக் கொள்ள முனைந்தனர். இந்தவகையில் தேசியபோராட்ட அலையினூடாக அரசியலுக்கு வந்து மார்க்சிய நூல்களை கற்க ஆரம்பித்த முதற் கூட்டமாக இவர்களே விளங்கினர். இதன் வாயிலாக இடதுசாரிக் கண்ணோட்டத்தில் தேசிய இனப் பிரச்சினைக்கு விளக்கம் கொடுக்கவும் முன் வந்தனர். இவர்கள் தொடக்கி வைத்த இடதுசாரிக் கண்ணோட்டமே ஈ.பி.ஆர் எல். எவ்., ஈரோஸ் போன்ற இடதுசாரிப்பார்வையுடைய இயக்கங்கள் வளர்வதற்கு துணைபுரிந்தது. இவ்விரு இயக்கத் தலைமைப்பீடத்தில் இருந்த பலர் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்களாகவே விளங்கினர். இவ் இடதுசாரிப் பார்வை தமிழ் குறுந்தேசியவாதத்திலிருந்து விடுபட்டு சர்வதேசரீதியாக பிரச்சினையை சிந்திப்பதற்கு உதவியது. புலிகள் குறுந்தேசியவாதத்தை முன்வைத்து சிங்கள, முஸ்லிம் மக்களை கொலை செய்யும்போது அதனை எதிர்த்து பலவீனமான நிலையிலாவது ஒரு கூட்டம் இயங்குகின்றது என்றால் அதற்கு இவ் அமைப்பே முன்னோடியாக திகழ்ந்தது. இவர்கள் தமது போராட்டத்தின் ஒரு வேலைத்திட்டமாக சிங்கள மக்களை வென்றெடுத்தல் என்பதையும் சேர்த்துக் கொண்டமை இனக்குரோதத்தோடு சிங்கள மக்களை பார்க்காத ஒரு கூட்டம் வளர்வதையும் தூண்டியிருந்தது. ■

நன்றி - நூலகத்திட்டம்



# "மதத்தை அரசியலிலிருந்து பிரிக்காவிட்டால் எதிர்காலமே கிடையாது."

- சண்

தோழர் சண் மறைந்து விட்டார்.
தனது ஐம்பதாண்டுகால அரசியல் வாழ்க்கையில், தான் சார்ந்திருந்த கருத்திற்காக உறுதியாக நின்றவரும், சற்றும் வளைந்து கொடுக்காத உரம் வாய்ந்த மனவுறுதி கொண்ட கம்யூனிஸ்ட்டும், தனது முதுகெலும்பு நோய் காரணமாக தீவிரமான துன்பத்தை அனுபவித்த நேரத்திலும் ஓயாமல் அக்கறையுடன் உழைத்துவந்த வருமான சண் அவர்களது மூளை சிந்திப்பதை நிறுத்தி விட்டது.

இருக்கவோ, தொடர்ந்து படுக்கவோ, நடக்கவோ முடியாத நிலையிலும் சரிநிகருக்காக எழுத ஒப்புக் கொண்டவர் அவர்.
அவர் எழுத நினைத்தவை நிறைய. கையால் எழுத முடியாத போதும், அவர் சொல்லச் சொல்ல எழுத நாம் தயாராக இருந்த போதும் அவரால் அதைக் கூட செய்ய முடியாது போய்விட்டது.

மார்க்சிய,லெனினிய,மாசேதுங் சிந்தனைகளை இலங்கையின் மூலை முடுக்கெங்கும் பரப்பக் காரணமாக இருந்த மூலவர் அவர்.

அறுபதுகளிலேயே ஆயுதப் போராட்டத்தை வலியுறுத்திய அவர், தேசிய விடுதலைப் போராட்டத்தின் போக்கு குறித்து இறுதிக்காலத்தில் தீவிர அவதானிப்புகளை கொண்டிருந்தார்.



அவருக்கு அறிமுகம் தேவையில்லை.
மாசேதுங், அன்வர் கோஷா போன்ற பெரும் தலைவர்களுடன் சேர்ந்து பழகும் வாய்ப்புப் பெற்றவரும், சீனாவின் கலாசாரப் புரட்சிக் காலத்தின் போது புரட்சியாளர் மத்தியில் உரையாற்றும் வாய்ப்புப் பெற்றவருமான சண்ணின் அனுபவங்கள் நிறைய.
சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் கூட்டுச் சேர்ந்த இவரது சகாக்களின் அரசினால் இவர் சிறைவைக்கப்பட்டார். சிறையிலிருந்த போது இவர் எழுதிய நூல்கள்; 1. இலங்கை இடதுசாரி இயக்க வரலாறு. 2. மார்க்சியப் பார்வையில் இலங்கையின் வரலாறு.

கட்சியின் தத்துவவாதியும், அரசியல் வழிகாட்டியும், செயல் வீரனுமான அவரால் நிறைய எழுதமுடியவில்லை. அதற்கான அவகாசம் அவருக்கு கிட்டியதில்லை. அவரது 'ஒரு கம்யூனிசப் போராளியின் அரசியல் நினைவுகள்' என்ற நூல் ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளிவந்துள்ளது. அதன் சில பகுதிகள் சிங்களத்திலும் வந்துள்ளன.

சோவியத் உடைவு பற்றி அவரது இறுதிக் காலங்களில் அவருடன் பேசும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். '' அது எதிர்பார்த்தது தான். முதலாளிய மீட்சியின் தர்க்க ரீதியான முடிவு அது''.
சுருக்கமாகவும், தெளிவாகவும், ஆழமாகவும் பேசவும் எழுதவும் வல்ல சண்ணின் மறைவு முற்போக்கு சக்திகளுக்கு ஓர் பேரிழப்பே.

''ஒரு கம்யூனிசப் போராளியின் அரசியல் நினைவுகள்'' என்ற அவரது நூலிலிருந்து புத்த மதம் குறித்து அவர் எழுதிய ஒரு பகுதி பிரசுரமாகிறது.

சிங்களவர் மத்தியில் நிலவும் சிந்தனைக் குழப்பம், செயல் குழப்பம் ஆகியவற்றுக்கு சிங்கள புத்த மத சிந்தனையில் ஒழுக்க நியாய பாரம்பரியம் ஒன்று இல்லாமை ஒரு காரணமாகும். புத்தர் தனது வாழ்க்கைக் காலத்தில் மூன்று தடவை இலங்கைக்கு வந்து சென்றார். இவற்றில் ஒரு தடவை சிவனொளி பாத மலையில் தமது கால் பாதத்தைப் பொறித்துச் சென்றார் முதலியன போன்ற கட்டுக் கதைகள் இன்னும் வழக்கில் இருக்கின்றன. இலங்கையின் மிகவும் பிரசித்தி பெற்ற தொல்லியலாளரான டாக்டர் பரணவித்தான தான் போதிய அறிவியல் நோக்குடனும் துணிவுடனும் இந்தத் தத்துவத்தை மறுத்துரைத்த வரலாற்று ஆசிரியர் ஆவார்.

புத்தர் தமது மறைவுக்கு முன் இலங்கையின் பாதுகாப்பை சக்ராவுக்கு ஒப்படைத்தார். புத்தருக்கு தமது தத்துவம் இறுதியில் இந்தத் தீவில் ஸ்தாபிக்கப்படும் என்பது தெரிந்திருந்தது. புத்தரின் ஆணையை ஏற்றுக்கொண்டதும் சக்ரா விஷ்ணுவை அழைத்து தீவின் பாதுகாப்பை அவரிடம் ஒப்படைத்தார். இது இன்னொரு கட்டுக்கதை. இந்தக் கட்டுக்கதைகள் வரலாற்று உண்மைகளாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஒரு மதகுரு வரலாற்று ஆசிரியராகும் போது இதுதான் நடக்கின்றது. இலங்கையின் மாபெரும் வரலாற்றுப் பதிவேடான மஹாவம்ச ஒரு மத குருவால் எழுதப்பட்டது. மகாநாம என்ற இந்த மதகுரு கி.பி.6-ம் நூற்றாண்டில் மஹாவம்சத்தை எழுதினார். மகாவீரசங்க அவருடைய மூல ஆதாரங்களை சேமித்து வைத்தது. மஹாவம்ச நூலின் பிரதிகள் அனைத்தையும் எரித்துக் கொளுத்த வேண்டும். ஏனென்றால் சிங்களப் பௌத்தர்களின் இனரீதியான சிந்தனைக்கு அவைதான் பெரிதும் பொறுப்பானவை என்று மதிப்பிற்குறிய கல்விமானான டாக்டர் ஈ. டபிள்யு. அதிகாரம் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். இக் கட்டுரை சிங்கள ஞாயிறு இதழான றிவிசரவில் 1983ம் ஆண்டு செப்டெம்பர் 25ம் திகதி வெளி வந்தது இது ஒரு சுத்தமான காற்று வீசுவது போல் அமைந்தது.

இலங்கையில் புத்தமதத்தை புரிந்து கொள்ள அதன் வரலாற்றில் ஆரம்பத்தில் ஏற்பட்ட பிளவுகளை அறிந்து கொள்வது அவசியம். தத்துவ, கட்டுப்பாட்டு விஷயங்களில் இலங்கை புத்த மத குருமார் அனைவரும் மகாவீராவின் அதிகாரத்தை அங்கீகரிக்கப்பட்ட புத்தமத கோயிலாக ஆரம்பத்திலிருந்து ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் முற்பகுதியில் அபயகிரி என்று அழைக்கப்படும் புதிய பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப் பட்டது. பின்னர் இதிலிருந்து இன்னொரு கோஷ்டி பிரிந்து ஜீத்தாவன மடாலயத்தை அதன் தலைமையகமாகக் கொண்டிருந்தது.

வாசகத்திலும் வியாக்கியானத்திலும் சில வேற்றுமைகள் இருந்த போதும் இந்த மூன்று பிரிவுகளும் புத்தமதத்தின் தேரவாதப்பிரிவு அல்லது பாரம்பரியப் பிரிவு என்பதைச் சேர்ந்தவையாக இருந்தன. ஆனால் இந்தியாவில் புத்த மதத்தவர்கள் மத்தியில் புதியதொரு பிரிவு தோன்றியது. ஒருவர் சொந்த விமோசனத்திற்குப் பாடுபடுவதற்கும் முழுமனித குலத்தின் விமோசனத்திற்கு பாடுபடுவதற்கும் இடையில் இந்தப் பிரிவு வித்தியாசம் கண்டது என்று பரணவித்தான குறிப்பிடுகின்றார். இந்தப் பிரிவின் ஆதரவாளர்கள் முழு மனித குலத்தினதும் விமோசனத்திற்காக பாடுபடுவதை பெரிய பிரயத்தனம்- மகாயான என்று அழைத்தார்கள். ஒருவருடைய விமோசனத்திற்காகப் பாடுபடுவதை தாழ்வான பிரயத்தனம் - ஹீனயான என்று அழைத்தார்கள்.

புத்த மதத்தில் ஏற்பட்ட இந்தப் பிரிவுக்கும் சீர்திருத்தத்தினால் ரோமன் கத்தோலிக்க மதத்தில் ஏற்பட்ட பிரிவுக்கும் இடையில் ஒரு ஒத்த தன்மை இருப்பதையும் காண முடியும். சீர்திருத்தவாதிகளைப் போல புத்த மதத்தின் மகாயான பிரிவினர் கூடுதலான சுதந்திரமானவர்களாகவும் ஆகவே முற்போக்கானவர்களாகவும் இருந்தார்கள். துணிவான தத்துவஞானிகள் அவர்களால் கவர்ந்திழுக்கப்பட்டார்கள். மகாயான தத்துவத்துக்கு அபயகிரி மடாலயத்தில் ஆதரவாளர்கள் இருந்தார்கள். மகாவிகாரை அதை வன்மையாக எதிர்த்தது. மகாவிகாரை தேரவாதப் புத்தமதப் பாரம்பரியப் பிரிவின் கோட்டையாகியது. இவ்வாறு மகாவிகாரை சிறீலங்கா, பர்மா, சீயெம், கம்போடியா ஆகிய நாடுகளைச் சார்ந்த தெற்கு புத்திஸ்டுகளின் போதனைகளை போதித்தது. அபயகிரி மடாலயம் காஷ்மீர், திபெத், சீனா ஆகிய நாடுகளைச் சார்ந்த தெற்கு புத்திஸ்டுகளின் போதனைகளை இந்திய வைத்துல்யவிடமிருந்து கற்றுக் கொண்டு போதித்தது.

மகாவிகாரை மடாலயத்துக்கும் அபயகிரி மடாலயத்துக்கும் இடையில் உக்கிரமான வாதவிவாதம் ஒன்று ஏற்பட்டது. கி.பி. 215-237ஆம் ஆண்டுகளில் ஆட்சி புரிந்த வொஹறக்க திஸ்ஸவின் காலம் தொடக்கம் எதிர்த்தரப்பை எரித்தொழிக்கும் செயல்களும் இடம் பெற்றன. அபயகிரி மடாலயம் வைத்திருந்த பதிவேடுகள் எரித்து அழிக்கப்பட்டன. இது ஒரு புத்த மத விரோதச் செயல். இவ்வாறு மகாவிகாரை அதாவது பாரம்பரியப் பிரிவு புத்த மதத்தில் அபயகிரிப் பிரிவை அழித்தொழித்தது. ஹீனயான புத்த மதப் பிரிவு தான் துரதிருஷ்டவசமாக வெற்றி கண்டது. இலங்கையில் புத்தமத சிந்தனையிலான அறிவுரீதியான தேக்கம் இதனால்தான் ஏற்பட்டது. ஸ்பெயினில் சீர்திருத்தவாதிகளுக்கு ஏற்பட்ட அநியாயங்களை மனதில் கொண்டு சீர்திருத்தம் நசுக்கப்பட்டிருந்தால் ஐரோப்பாவில் அறிவுக்கு என்ன நடந்திருக்கும் என்று யோசித்துப்பாருங்கள். இலங்கையில் இதுதான் நடந்தது, சீர்திருத்தம் நசுக்கப்பட்டது.

இலங்கை அரசியலில் புத்த மத குருக்களின் பாத்திரம் அநேகமாக எதிர் மறையானதாகவும் பிற்போக்கானதாகவும் இருந்தது. அவர்கள் ஆக்கப்பூர்வமான பாத்திரம் வகித்த காலமும் இடைக்கிடை இருந்தது. சில குறிப்பிடத்தக்க புறநடைகள் இருந்த போதும் புத்த மத குருமார் கல்வி அறிவற்றவர்களாகவும் அறியாமையானவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் தமிழைக் கூடக் கற்றுக் கொள்வதில்லை. அவர்கள் குறுகிய மனப்பான்மை உடையவர்களாகவும் ஒற்றைப்போக்கு உடையவர்களாகவும் வெளி உலகைத் தெரியாதவர்களாகவும் இருக்கிறார்கள். புத்த மதம் என்றால் அது சிங்களவர்களுக்கே உரியது என்று அவர்கள் கருதுகின்றார்கள். மஞ்சள் அங்கி அணிந்த ஒரு புத்த குரு மக்கள் மிகுதியும் விரும்பிய ஒரு பிரதமரைச் சுட்டுக் கொன்றதும், இன்னொரு புத்த மதகுரு இக்கொலையில்குற்றஞ்சாட்டப்பட்டு சிறைத் தண்டனை பெற்றதும் (அவர் அங்கேயே இறந்தார்) எதுவிதத்திலும் தற்செயலானதல்ல.

அண்மைக் காலக் கலவரங்களின் போது சில புத்த குருமார் அங்கிகளை உயர்த்திப் பிடித்த வண்ணம் வெறிப்பிடித்த மக்கள் கூட்டத்துக்கு தலைமை தாங்கிச் சென்றார்கள். இந்தக் கலவரங்களின் போது ஜனாதிபதி ஜெயவர்த்தனா இனவெறியர்களைச் சாந்தப்படுத்த மிகவும் தமிழர் எதிர்ப்புணர்வுடைய எல்லாகுணவம்ச என்ற புத்த மத குருவின் உதவியைப் பெற வேண்டியிருந்தது. அமைச்சர் காமினி திசநாயக்காதான் அவரை ஜனாதிபதியிடம் கூட்டிச் சென்றார்.

கொழும்பு வஜிரராம கோவில் பிரதம மதகுருவான வரை மடிகெபன்னசீக போன்ற மதகுருமார்கள் மற்றக் குருமாரின் அப்பட்டமான இனவெறியை மூடிமறைக்கும் மிக மெல்லிய அறிவு காவி மூடு திரையை அணிகின்றார்கள்.. தமிழர்கள் இலங்கையின் வட்க்கிலும் தெற்கிலும் உள்ள 261 புத்தமத கோயில்களை அழித்துள்ளதாக அவர் கூறியுள்ளாரென 1983 செப்டெம்பர் 15ம் திகதிய இண்டியா டுடே சஞ்சிகை கூறுகின்றது.'எமது விருந்தோம்பல் காரணமாக தென் இந்தியாவிலிருந்து வந்த படையெடுப்பாளர்களை தங்கி இருக்க நாம் அனுமதித்தோம். தமிழர்களை நாட்டில் எங்கும் வாழ அனுமதித்தோம். எங்களுடன் திருமணம் செய்யவும் அனுமதித்தோம். 1977-ல் ஒரு இலட்சத்துக்கு மேலான தமிழர்கள் கொழும்பில் வாழ்ந்தார்கள். ஒரு சில ஆயிரம் சிங்களப் படையினர் தான் வடக்கில் இருக்கின்றார்கள்.'' இப்படி கூறுகின்றார் பன்னசீக. ஆயிரம் பேரைக் கொண்ட சிங்களப்படை ஒன்றை வடக்கிற்கு அனுப்ப வேண்டும் என்று முதலில் பிரேரித்தவர்களில் பன்னசீகவும் ஒருவர். இதுதான் புத்தமத பக்தியும் கருணையும்.

இலங்கையிலுள்ள புத்த மதகுருமார் புத்தர் போதித்தவாறு உலோகாயதப் பொருட்கள் அற்ற எளிய வாழ்க்கையை வாழவில்லை. கிராமங்களில் உள்ள ஏழைப் புத்தகுருமார்தான் இதற்குப் புறநடையாக இருந்தார்கள். ஆனால் பல புத்த குருமார் சுரண்டல்கார செல்வர்களாக இருக்கின்றார்கள். இலங்கையின் புத்த மதத்தின் வரலாற்றில் ஆரம்பத்துடனேயே இது தொடங்கி விட்டது. வாலகம்பாகு காலந்தொட்டே (கி.மு. 103-102, கி.மு. 89-77) சிங்கள மன்னர்கள் மடாலயங்களுக்கு நிலத்தைத் தானம் செய்யும் பழக்கத்தை கொண்டிருந்தார்கள். இது புத்த மதக் கோட்பாட்டுக்கு நேர் விரோதமானது. வாலகம்பாகுதான் நாடு கடந்திருந்தபோது தனக்கு உதவி செய்த மதகுருமாருக்கு வெகுமதி வழங்க இந்தப் பழக்கத்தைக் கடைப்பிடித்தார். சங்கவின் ஆதரவைப் பெற மற்ற மன்னர்கள் இந்தப் பழக்கத்தை தொடர்ந்து கடைப்பிடித்தார்கள். பொருளாதார நலன்களை சங்கவுக்கு அளித்ததால் அதன் எண்ணிக்கை பெருகியது. சங்க உறுப்பினர்களுக்கு நல்ல வாழ்க்கை உத்தரவாதம் ஆகியது. புத்தரின் போதனைகளுக்கும் இதற்கும் தொலைதூரம். இவ்வாறு இந்த மதகுருமார் சமுதாயத்தின் புல்லுருவிகள் ஆகினார்கள். எந்தவிதமான ஆக்கபூர்வமான வேலையும் செய்யாமல் தமக்குத் தேவையானது எல்லாவற்றையும்' பெற்றார்கள். மகாயான பிரிவைச் சேர்ந்தவர்கள் இப்படி இல்லை. அவர்கள் ஒருவகை உற்பத்தி உழைப்பில் ஈடுபட்டார்கள்.

ஆகவே இலங்கையில் புத்தமத சங்கம் அநேகமாக எதிர்மறைப் பாத்திரத்தையே வகித்திருக்கின்றது. சிங்களவர்கள் அதாவது புத்தமதத்தவர்கள் சங்கவின் ஆதிக்கம்- அடிமைத் தனத்திலிருந்து விடுபடாமல் இருந்தால் எதிர்காலம் இருண்டதாக இருக்கும். சிங்கள பௌத்தர் என்ற கருத்தே புத்தமதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு விரோதமானது. புத்தர் ஒரு இலங்கையர் அல்ல; ஒரு இந்தியர் என்பதை எத்தனை சிங்களப் பௌத்தர்கள் அறிந்திருப்பார்கள் அல்லது ஏற்றுக் கொள்வார்கள் என்பது சந்தேகமே. மதத்தை அரசியலில் இருந்து பிரிக்காவிட்டால் இலங்கைக்கு எதிர்காலம் கிடையாது. ■

நன்றி - நூலகத்திட்டம்



# முஸ்லிம்களின் அராபியப் பாரம்பரியம் ஒரு கற்பனைச் சகதி

மருதூர் பசீத்

தாங்கள் அராபிய முஸ்லீம்களின் ஆண்வழிச் சந்ததியினர் என்ற கருத்தும் நம்பிக்கையும் நீண்ட காலமாக இலங்கை முஸ்லீம்களிடையே நிலவி வருகின்றது. குறிப்பாக முஸ்லீம் அரசியல் தலைமைகளினாலும் முஸ்லீம் புத்திஜீவிகளினாலும் இக் கருத்து பலமாக வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. அன்றைய ஐ. எல். எம். அஸீஸ் முதல் இன்றைய முகம்மது சமீம் வரை இதுவே பொதுப் பண்பாக இருந்து வருகின்றது.

இலங்கை முஸ்லீம்கள் இடையே **''அராபியப் பாரம்பரியம்''** பற்றிய எண்ணக் கரு இவ்விதம் வலிமையாக இடம் பெற்றிருப்பதற்கான காரணங்கள் தெளிவானவை: அதாவது தாம் ஒரு **தனித்துவமான சமூகம்** என்பதை நிலைநாட்டவும் அதனூடாக **தமக்குரிய உரிமைகளைக் கோரவும்** துணை செய்கின்ற அம்சமாக ''அராபியப் பாரம்பரியம்'' என்ற கருத்து முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றது.

இலங்கை முஸ்லீம்களை ''தமிழர்கள்'' /''தமிழ் பேசும் மக்கள்''/ ''இஸ்லாமியத் தமிழர்கள்'' என்ற பொதுவான வரையறைக்குள் இணைத்துக் கொள்வதற்கு தமிழ்த் தலைமைகள் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக முயற்சித்து வந்திருக்கின்றன. 1880களில் பொன். இராமநாதன் தொடக்கம் இன்றைய தமிழ்

> ''இலங்கை முஸ்லீம்களைத் தனித்துவப்படுத்தியிருக்கும் அதே அராபியப்பாரம்பரியமே அவர்களின் தனித்துவத்தைப் பலவீனப்படுத்திய பிரதான காரணியாகவும் இருந்திருக்கிறது.''

அமைப்புகள் வரை இத்தகைய முயற்சிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்திருக்கின்றன. மொழி ரீதியாகவும், கணிசமான அளவில் கலாசார ரீதியாகவும், மற்றும் குறிப்பாக வடக்கு-கிழக்கில் பிரதேசம், பொருளாதார அமைப்பு என்பவற்றின் அடிப்படையிலும் முஸ்லீம்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே பரந்தளவிலான ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவ்வொற்றுமைகளைக் காரணம் காட்டி இலங்கை முஸ்லீம்களை ''தமிழர்கள்'' /''தமிழ் பேசும் மக்கள்''/ ''இஸ்லாமியத் தமிழர்கள்'' என்ற பிரிவுக்குள் உள்ளடக்கிக் கொள்ள முனைந்து வந்திருக்கும் தமிழ்த் தலைமைகளுக்கு எதிராக ''அராபியப்பாரம்பரியம்'' பற்றிய கருத்து முஸ்லீம்களால் உறுதியாக முன்வைக்கப்பட்டு வந்திருக்கின்றது.

**ஒரு சமூகத்தின் தனித்துவத்திற்கும் அச் சமூகம் உரிமை பாராட்டுகின்ற அதன் பூர்வீகத்திற்கும் இடையே** நெருங்கிய தொடர்பு அவதானிக்கப்பட்டிருக்கின்றது. எப்போதோ புதைந்து விட்ட தமது பூர்வீகத்தை மீண்டும் தோண்டியெடுப்பதனூடாக தமது தனித்துவத்தை நிலைநாட்டும் முயற்சிகள் உலகில் பல்வேறு சமூகங்களில் இடம்பெற்றிருக்கின்றன. இவ்வகையில் இலங்கை முஸ்லீம்களும் தமிழ்ப் பாரம்பரியத்திற்கு எதிராக, ''அராபியப் பாரம்பரியத்தை'' முன்னிறுத்தியதனூடாகத் தமது தனித்துவத்தை வெற்றிகரமாக நிலைநாட்டி வந்திருக்கிறார்கள். எனினும் இலங்கை முஸ்லீம்களின் தனித்துவத்தை நிலைநாட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்ட இந்த முயற்சியானது, மறுதலையாக இலங்கை முஸ்லீம்களிடையே ஏற்படுத்திய பாதகமான விளைவுகளைக் கவனத்தில் கொள்ள வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில் ஆழ்ந்து நோக்கினால் இலங்கை முஸ்லீமகளைத் தனித்துவப்படுத்தியிருக்கும் அதே ''அராபியப் பாரம்பரியமே'' அவர்களின் தனித்துவத்தைப் பல**வீனப் படுத்திய பிரதான காரணியாகவும்** இருந்திருக்கின்றது என்ற உண்மையைக் கண்டு கொள்ள முடியும். இந்த முரண்பாட்டை நாம் பின்வருமாறு விளங்கிக் கொள்ளலாம்.

(1) தாம் அராபிய வழித்தோன்றல்கள் என்ற கருத்து இலங்கை முஸ்லீம்களிடையே அளவுக்கதிகமாக வலியுறுத்தப்பட்டதால், **இலங்கை தமது சொந்த நாடு** என்ற எண்ணம் இலங்கை முஸ்லீம்களிடையே பலமாக நிலை பெற முடியவில்லை. ( மத்திய கிழக்கு அரபு நாடுகளின் செல்வச் செழிப்பில் தமது பெருமையைக் காண முயன்ற ஒரு கற்பனைச் சகதிக்குள் இலங்கை முஸ்லீம்கள் புதையுண்டிருந்தார்கள்.) இதன் விளைவாக, இலங்கையில் தமக்கிருக்கும் உரிமைகளைப் பற்றிய எண்ணமும், அந்த உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு தாம் கொண்டிருக்கும் பாத்தியதை பற்றிய உணர்வும் இலங்கை முஸ்லீகளிடையே கடந்த காலங்களில் காத்திரமாக வெளிப்படவில்லை.

(2) தாங்கள் அரபிகளின் வழித்தோன்றல்கள் என்பதால் தம்மைப் பாதுகாக்கவும், தமது உரிமைளைப் பெற்றுத் தரவும் அரபு நாடுகள் முன்வரும் என்ற அர்த்தமற்ற எதிர்பார்ப்பு இலங்கை முஸ்லீமகளிடையே நிலவி வந்திருக்கின்றது. இதனால் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு, **தாமே சுயமாகச் செயற்படவேண்டும்** என்ற உணர்வு கடந்த காலங்களில் அவர்களிடையே பலமாக உருவாகவில்லை-அதாவது தமது உரிமைகளை உறுதியாகக் கோரக் கூடிய **ஒரு அரசியல் சமூகமாக** தம்மை உருவாக்கிக் கொண்டிராத நிலைக்கு இலங்கை முஸ்லீம்கள் ஆளாக்கப்பட்டிருந்தார்கள்.

(3) தமது உரிமைகள் பற்றி உணர்வுபூர்வமான அக்கறைகள் கொண்டிராததாலும், அவற்றை வென்று கொள்வதற்குத் தாமே சுயமாகச் செயற்பட வேண்டிய அவசியத்தை உணராததாலும் தமது அரசியல் தலைமைகளின் நடவடிக்கைகளை சரியாக இனங் காண முடியாத நிலைமைக்கு இலங்கை முஸ்லீம்கள் ஆளாகியிருந்தனர். **தமிழ்த் தலைமைகளிடமிருந்து அரசியல் ரீதியில் பிரிந்து கொள்வதற்காக** ''அராபியப் பாரம்பரியத்தை'' வலியுறுத்திய முஸ்லீம் தலைமைகள், மறுபுறத்தில் **சிங்கள இனவாதத்துடன் அரசியல் ரீதியில் சமரசம் செய்து கொண்டும் சரணடைந்தும்** வந்திருக்கின்றன. தமது தலைமைகளின் இவ்வித இரட்டைப் போக்குக்கு எதிராக கடந்த காலங்களில் இலங்கை முஸ்லீம்கள் வெகுஜன ரீதியில் திரண்டெழவில்லை. இந்த நாட்டிலுள்ள எந்த இனத்திற்கும் அடிமைப்படாமல், சமத்துவமாக வாழ்வதற்கு தாம் கொண்டிருக்கின்ற உரிமைகள் பற்றிய உணர்வை இந்த ''அராபியப் பாரம்பரியம்'' பற்றிய கருத்தினூடாக இலங்கை முஸ்லீம்கள் ஆழமாகப் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்பதே அவர்களின் இத்தகைய செயலற்ற தன்மைக்குரிய பிரதான காரணமாக அமைந்திருந்தது.

இவ்வாறு சாராம்சத்தில் ''அராபியப் பாரம்பரியம்'' பற்றிய கருத்தினூடாக கடந்த காலங்களில் தமது தனித்துவம் பலவீனத்திற்குள்ளாகியது என்ற நிதர்சனத்திலிருந்துதான் இலங்கை முஸ்லீம்கள் தமது அரசியல் செயற்பாடுகளைத் தொடங்க வேண்டியுள்ளது. ஒரு சமூகத்தின் தனித்துவம் அதன் பூர்வீகத்தினால் மட்டும் உறுதி செய்யப்படுவதில்லை; அத்துடன் அது இன்னும் பல காரணிகளினாலும் தீர்மானிக்கப்படுகின்றது. அனைத்திற்கும் மேலாக **ஒரு சமூகம் தான் ஏனைய சமூகங்களிலிருந்து வேறுபடுவதாகக் கொள்கின்ற உணர்வே அதன் தனித்துவத்தை உருவாக்குகின்ற தளமாகின்றது.** இந்த உணர்வு மொழி, கலாசாரம், பிரதேசம், பொருளாதாரம், நிறம், மதம், பூர்வீகம், அரசியல் பாகுபாடு.... எனப் பல்வேறு காரணிகளால் தூண்டப்படலாம்.

உதாரணமாக;

(அ) மேற்குப் பாகிஸ்தானியரும், கிழக்குப் பாகிஸ்தானியரும் இஸ்லாமியர்களாக இருந்த போதிலும் மொழி, பிரதேசம், கலாசாரம் என்பவற்றில் அவர்களிடையே நிலவிய **வேறுபாடுகளினாலும்** மேற்குப் பாகிஸ்தானிய அரசு கிழக்குப் பாகிஸ்தானியர் மீது மேற்கொண்ட **ஒடுக்குமுறைகளினாலும்** கிழக்குப் பாகிஸ்தானியர் தனியான, சுதந்திர நாடாக (பங்களாதேஷாக) பிரிந்து கொண்டனர்.

(ஆ) காஷ்மீரில் வாழ்கின்ற முஸ்லீம்களும் இந்துக்களும் **ஒரே மொழியைப்** பேசுகின்ற போதிலும், அவர்களிடையே மதம், கலாசாரம் என்பவற்றில் நிலவுகின்ற **வேறுபாடுகளினாலும்,** காஷ்மீர் முஸ்லீம்கள் மீது இந்திய அரசினால் மேற்கொள்ளப்படுகின்ற **ஒடுக்குமுறைகளினாலும்** அந்த முஸ்லீம்கள் தம்மை இந்துக்களிலிருந்து வேறுபடுத்தி, **தனியான** தேசமாகவே அடையாளம் காண்கின்றனர்.

(இ) யூகோஸ்லாவியாவில் சேர்பியரும், குரோஷியரும், முஸ்லீம்களும் **ஒரே மொழியைப்** பேசுபவர்களாக இருந்தும், அவர்களது மதங்கள் வேறுபடுவதால் அவர்கள் **தனித்தனி** தேசமாகப் பிரிந்துவிட்டார்கள்.

(ஈ) பாலஸ்தீன முஸ்லீம்கள் அரபு மொழி பேசுபவர்களாக இருந்தும், அவர்கள் தற்போது பல அரபிய முஸ்லீம் நாடுகளில் அகதிகளாக வாழ்கின்ற போதிலும் அவர்கள் ஒரு போதும் தாம் அகதிகளாக இருக்கின்ற அரபு முஸ்லீம் நாடுகளுடன் இணைந்து தம்மை அடையாளம் காணவில்லை. மாறாக தம்மை பாலஸ்தீனியர்களாகவே அடையாளம் காண்கின்றனர். அத்துடன் பாலஸ்தீனியர்களில் **முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும் இருக்கின்ற போதிலும்,** அவர்கள் மொழி, பிரதேசம், இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு...போன்ற விடயங்களில் கொண்டிருக்கின்ற **ஒற்றுமைகளின்** காரணமாக தம்மை பாலஸ்தீனியர்கள் என்றே அடையாளம் காண்கின்றனர்.

(உ) குர்திஷ் முஸ்லீம்கள் ஈரான், ஈராக், துருக்கி என்ற மூன்று முஸ்லீம் நாடுகளில் வாழ்கின்ற போதிலும் அவர்கள் தம்மை தாம் வாழ்கின்ற நாடுகளுடன் இணைத்து அடையாளம் காணவில்லை. மாறாக இந்த ஒவ்வொரு நாட்டிலும் வாழ்கின்ற குர்திஷ் முஸ்லீம்கள் தம்மைத் தனியான தேசமாகக் கருதி அந்தந்த நாடுகளிலிருந்து தாம் சுதந்திரம் பெறுவதற்காகவே போராடி வருகிறார்கள்.

(ஊ) ஈராக், குவைத், சவூதி அரேபியா, எகிப்து, லிபியா... போன்ற அரபு நாடுகளில் வாழ்கின்ற முஸ்லீம்களும் அரபு மொழி பேசாத ஈரானிய, பாகிஸ்தானிய, துருக்கிய, எதியோப்பிய, கசாக்கிஸ்தானிய முஸ்லீம்களும் தம்மை **ஒரே மதத்தினராகக் கருதுகின்ற போதிலும்** ஏனைய விடயங்களைப் பொறுத்தவரை (உ+ம், அரசியல், மொழி, கலாசாரம், பிரதேசம்...போன்றவை) அவர்கள் தம்மை தனித்தனி தேசமாகவோ,/ நாடாகவோதான் அடையாளம் காண்கின்றனர்.

> ''தமிழ் மக்களை ஒரு தனித்துவமான தேசமாக அங்கீகரிக்கவும் அவர்கள் வாழுகின்ற பாரம்பரியப் பிரதேசத்தில் அவர்களுக்குரிய உரிமைகளை வழங்கவும் தயாராக இல்லாத சிங்கள இனவாதம் முஸ்லீம்கள் விடயத்தில் வேறு விதமாக நடந்து கொள்ளும் என்று எதிர்பார்க்க முடியாது ''

இவ்விதம் பல்வேறு சமூகங்களும், வெவ்வேறு காரணிகளின் அடிப்படையில் தமது தனித்துவத்தைக் கோருவதோடு, தமது உரிமைகளை வென்று கொள்வதற்காகக் **கடுமையாகப் போராடி வருகின்**றனர் என்ற உண்மையையும் இலங்கை முஸ்லீம்கள் புரிந்து கொள்ள வேண்டும். ''அராபியப் பாரம்பரியம்'' பற்றிய கருத்து தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டில் கடந்த காலங்களில் ஏற்படுத்திய பாதகமான விளைவுகளைச் சரியாகக் கிரகித்துக் கொள்ள வேண்டும். தமது சொந்த நாட்டில் தமக்குரிய உரிமைகள் பறிக்கப்பட்டு வருகையில் ''நாம் அராபியப் பரம்பரையினர்'' என்று வெறுமனே கூறிக் கொண்டிருப்பது ஒரு போலியான பெருமித உணர்வைத் தவிர வேறு எதையுமே பெற்றுத் தரவில்லை என்ற எதார்த்தத்தை இலங்கை முஸ்லீம்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மத்திய கிழக்கு அரபு நாடுகளைத் தவிர்ந்த ஏனைய நாடுகளில் வாழ்கின்ற முஸ்லீம்கள் ஏதோ ஒரு விதத்தில் தமது பூர்வீகத்தின் எங்கோ ஒரு புள்ளியில் அராபியப் பாரம்பரியத்தை ஒரு கூறாகக் கொண்டிருக்கலாம். எனினும் இந்த முஸ்லீம்களில் எவருமே தம்மை அராபியப் பரம்பரையினராகக் கூறிக் கொள்வதில் பெருமைப்பட்டுக் கொள்ளவில்லை. மாறாக இவர்கள் தாம் வாழும் நாட்டுடன் அல்லது தமது பாரம்பரிய வாழிடத்துடன் இணைந்தே தம்மை அடையாளம் காண்கின்றனர். காஷ்மீர் முஸ்லீம்கள் தொடக்கம் பொஸ்னியா முஸ்லீம்கள் வரை மின்டானோ முஸ்லீம்கள் முதல் குர்திஷ் முஸ்லீம்கள் வரை இதுவே பொது அம்சமாக இருக்கின்றது.

**எந்தவொரு சமூகமும் தாம் வாழ்கின்ற பிரதேசத்திற்கு வெளியே தனக்குரிய உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது.** இந்த

→ 12


நன்றி - நூலகத்திட்டம்



# கலாநிதி கிருஷ்ணதுரைக்கு புலி எதிர்ப்புக் காய்ச்சல்

கலாநிதி. ஆ.கிருஷணதுரையின் யாழ்ப்பாணத்தில் கலை என்னும் கட்டுரைத் தொடர் வெறும் புலி எதிர்ப்பை வெளிப்படுத்துவதாகவே வெளிவருகிறது. இவ்வாறு கூறுவது புலிகளையோ அல்லது புலிகளை ஆதரிக்கின்ற கலைஞர்களையோ விமர்சிப்பது கூடாது என்ற அர்த்தத்திலல்ல. அவர்கள் தொடர்பாக வைக்கப்படுகின்ற விமர்சனங்கள் தேசிய போராட்டத்தை பாதிக்காததாக அமைதல் வேண்டும் என்பதே முக்கியமானதாகும். இதற்கு விமர்சனங்கள் தேசிய போராட்டம் என்பவற்றுக்கிடையில் சமநிலை பேணப்படல் வேண்டும். இச்சமநிலை குழம்பினால் இதனை புலிகளும் அரசும் பயன்படுத்தக் கூடிய நிலை ஏற்பட்டுவிடும். கலாநிதி. ஆ.கிருஷ்ணதுரையின் கட்டுரை புலிகளையும் புலிகளுக்கு ஆதரவான கலைஞர்களையும் விமர்சிப்பதற்கு பதிலாக புலி எதிர்ப்பில் மட்டும் கவனம் செலுத்தியதாலேயே தமிழ் தேசியத்திற்கு துரோகமிழைக்கும் EPDPயினர் மக்கள் குரல் வானொலியில் அக்கட்டுரையை மற்றையது; புலிகளின் ஜனநாயக விரோத செயற்பாட்டை அங்குள்ள கலைஞர்கள் கண்டிக்கவில்லை என்பதற்காக அவர்கள் அதனை அங்கீகரிக்கிறார்கள் எனப் பொருள் கொள்வது முழுமையானதல்ல, யேசுராயா, முருகையன், சிதம்பரநாதன், போன்றவர்கள் புலிகளின் ஜனநாயக விரோத செயற்பாட்டை அங்கீகரிக்கின்றார்கள் என நான் கருதவில்லை. அதைப்பற்றி விமர்சனம் செய்யக் கூடிய சூழல் யாழ்ப்பாணத்தில் இல்லை (ஏன் கலாநிதி அவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தால் அவர்களால் கூட இது சாத்தியமாயிருக்காது). ஆனால் மறுபக்கத்தில் புலிகள் தமிழ்த்தேசியத்தின் பக்கத்தில் நிற்பதால் அவர்களை ஆதரிக்கின்றார்கள். புலிகளை ஆதரிப்பவர்கள் எல்லோரும் புலிகளின் ஜனநாயக விரோதத்தையும் ஆதரிப்பவர்கள் என்று கூறிவிட முடியாது.

புலிகளை விமர்சிப்பவர்களில் இரு வகையான போக்குகள் காணப்படுகின்றன. புலிகளை ஆதரிப்பவர்




அரசுக்கு சாதகமாக பயன்படுத்த முடிந்தது.

கலாநிதி ஆ.கிருஷ்ணதுரை தனது கட்டுரையில் புலி எதிர்ப்பினை இரண்டு வகைகளில் வெளிப்படுத்துகின்றார். ஒன்று யாழ்ப்பாண கலைஞர்களால் மேற்கொள்ளப்படும் கலை முயற்சிகள் புலிகளுக்கு ஆட்கள் சேர்க்கும் வேலையைச் செய்து கொடுக்கின்றது. தமிழ் இளைஞர்களை அநியாயமாக கொலை செய்விக்கின்றது. மற்றையது; யாழ்ப்பாண கலைஞர்கள் புலிகளின் ஜனநாயக விரோதநடவடிக்கைகளை கண்டிக்காததன் மூலம் அதனை அங்கீரீக்கின்றார்கள் என்பது.

கலாநிதி கிருஷ்ணதுரைக்கும் புலி எதிர்ப்பாளருக்கும் கசப்பானதாக இருந்தாலும் மக்கள் அறிந்த உண்மையாக இருப்பது இன்று தமிழ் தேசியத்தின் சார்பாக இயங்குவது புலிகள் மட்டுமே என்பதாகும். இதனாலேயே புலிகளின் ஜனநாயக விரோத அராஜக நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் தமிழ் மக்கள் புலிகளை ஆதரிக்கின்றார்கள். புலிகள் மட்டுமே தமிழ்த் தேசியத்தின் பக்கத்தில் நின்று கொண்டிருக்கையில் நடைபெறும் கலை முயற்சிகளும், கலைஞர்களும் பிரக்ஞை பூர்வமாக இயங்காத பட்சத்தில் புலிகளுக்கு சாதகமாக இருப்பது சாத்தியமே ஆகும். இதனாலேயே புலிகளுக்கு ஆட்கள் சேர்வதும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபடுவதும் கூட சாத்தியமாகிறது. புலிகளிலும் பார்க்க உண்மையான ஒரு தேசியத்தை முன்னெடுக்கின்ற ஓர் போக்கு வளர்கின்ற போதே இந்நிலமையை தவிர்க்க முடியும்.

கள் புலிகளின் தேசிய சார்புப் பக்கத்தை பார்க்கிறார்களே தவிர அதன் ஜனநாயக விரோதப்பக்கத்தை பார்ப்பதில்லை. புலிகளை எதிர்ப்பவர்கள் அதன் ஜனநாயக விரோதத்தைப்பார்க்கிறார்களே தவிர அதன் தேசியப்பக்கத்தைப் பார்ப்பதில்லை இவ்விரு போக்குகளும் அடிப்படையில் தவறானவையாகும். இவை இரண்டும் புலிகளும், அரசும் விமர்சனங்களை தவறாக பயன் படுத்துவதற்கான வாய்ப்பினை கொடுக்கின்றன.

எனவே, விமர்சனங்களை மேற்கொள்வோர் புலிகளின் இரண்டு பக்கங்களையும் கருத்தில் கொண்டு விமர்சனங்களை மேற்கொள்ளின் அவை ஆரோக்கியமாக இருக்கும் அல்லாவிடின் வெறும் துதிபாடல்களாகவோ அல்லது வெறும் புலிஎதிர்ப்பைக் கொண்டவையாகவோ மட்டுமே அமைந்திருக்கும்.

எனவே மேற்கூறிய நடைமுறை உண்மைகளை கலாநிதி கிருஷ்ணதுரை புரிந்து கொள்ள வேண்டும் அவருக்கு இவை புரியாது என்று நான் நினைக்கவில்லை. அவர் அதனை புரிந்து கொள்ள மறுக்கிறார் என்றே நான் நினைக்கிறேன். இவ்வாறு அவர் மறுப்பதற்கு காரணம் அவரைப் பீடித்துள்ள புலி எதிர்ப்புக் காய்ச்சலே ஆகும். இக் காய்ச்சல் அவரை விட்டு நீங்குகின்ற போதே அவரிடமிருந்து நல்ல விமர்சனங்களையும் நாம் எதிர்பார்க்கலாம்.

பண்டிதர்:சுப்பையா

கொழும்பு

# யேசுராசாவின் இரண்டகநிலை

தங்களது கடந்த இதழில் வெளியான கலாநிதி ஆ.கிருஷ்ணதுரை எழுதிய **'இன்றைய யாழ்ப் பாணத்தில் கலைகள்'** எனும் கட்டுரையில் **யேசுராசா** பற்றி குறிப்பிட்டிருந்தீர்கள். அவ்வளவும் எனக்கு உடன்பாடானதே நீங்கள் தந்த குறிப்புகளுக்கு சில ஆதாரங்களையும் சேர்த்துக் கொண்டீர்களானால் அக்கட்டுரை முழுமை பெறும்.

1) சமீபத்தில் இங்கிருந்து வெளியாகும் **சாளரம்** எனும் சஞ்சிகையில் ஈழத்து இலக்கியம் பற்றி யேசுராசா எழுதியிருந்தார். அதில் கவிதை பற்றி குறிப்பிடுகின்ற போது இடம் பெற்றிருந்த பெயர்கள்தான் வியப்பூட்டின. தரமான கவிஞர்கள் வரிசையில் சேரன், ஜெயபாலன் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. இது ஆச்சரியம் என்றால் அவ்வரிசையில் காசி ஆனந்தன் சேர்க்கப்பட்டிருந்தது வினோதமாக இருந்தது. யேசுராசாவின் இரண்டக நிலைக்கு இது மிகச்சிறந்த உதாரணம் யேசுராசா இப்போது எந்த கூடாரத்தை சேர்ந்தவர் என்பது புரிகிறதா?


2) புலிகளினால் யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்டதனை நியாயப்படுத்துகிற யேசுராசா, முன்னர் தனது அலை வெளியீடாக ஜெயபாலனின் **முஸ்லீம் மக்களும் தேசிய இனப் பிரச்சினையும்** எனும் நூலினை வெளியிட்டிருந்தார். அதில் முஸ்லீம்களின் பாரம்பரிய பிரதேசம், தமிழ்மக்களுடனான அவர்களின் உறவு என்பன பற்றி எல்லாம் வரையறை செய்யப்பட்டிருந்தது. இப்போது யேசுராசா இதற்கு என்ன சொல்லப்போகின்றார்? அதனை மறந்து விட்டரா? அல்லது வெளியிட்டது தன் தவறு என மன்னிப்பு கேட்பாரா? மற்றவர்களின் இரண்டக நிலை பற்றி வாய்கிழியக் கத்துகிற இவருக்கு தனது பல அக நிலை பற்றி புரியவில்லைப் போலும்.

இறுதியாக உங்களிடம் ஒரு சந்தேகம் கலாநிதி கிருஷ்ணதுரை என, நான் ஒரு வரையும் கேள்விப்படவில்லை. இவ்வாறான கலாநிதி இலங்கையில் இருப்பதாகவும் எனக்கு தெரியவில்லை யார் இந்தக் கலாநிதி?

ம.அருள்யோதன சிங்கம்.
யாழ்ப்பாணம்

# பேசாப் பொருளை...

கலைஞர் யாது செய்யலாம்? புலிகளின் அரசியலுடன் முரண்படுகிற ஒரு கலைஞனுக்கு அவர்களுக்காக படைக்க மனச்சாட்சி இடம் கொடுக்காது. என்ன செய்யலாம்? இலக்கியம் படைப்பவன் எழுதிவிட்டு, ஒளித்தாவது வைத்திருக்கலாம். நாடகம் படைப்பவன் தினவெடுக்கிற கற்பனைகளை என்ன செய்ய முடியும்? அவன் எவ்வாறு வெளிப்படுத்துவது? எவ்வாறு படைப்பது? ஒரேயொரு தீர்வு யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறுவதா? ஈழத்தை விட்டால் அவனுக்கு ஏது புகலிடம்? ■




அரசைத் தீவிரமாக விமர்சிக்கும் மாற்றுப் பத்திரிகைகளுக்கெதிரான பாய்ச்சலை அண்மைக் காலமாக தீவிரப்படுத்தியிருக்கிறது அரசு. ''லக்திவ'' சீல் வைக்கப்பட்டதும், அது தொடர்பாக பிரதமர் ஆற்றிய உரையும் அரசினுடைய இனவாதப் போக்கையும், ஜனநாயக மறுப்பையும், தெட்டத் தெளிவாக அம்பலமாக்கியிருக்கிறது.
லேக் ஹவுஸ் பத்திரிகைகளும், பிரதான எதிரணிப் பத்திரிகைகளான ஐலண்ட், திவயினவும் தமிழ் மக்களுக்கெதிரான யுத்தத்தை ஆதரிக்கிற அதேவேளை இந்த மாற்றுப்பத்திரிகைகளான யுக்திய, லக்திவ, அத்த, ராவய போன்ற பத்திரிகைகள் யுத்தத்தை நிறுத்துமாறு குரலெழுப்பி வருகின்றன.

இது தொடர்பில் பிரதமர் ஆற்றிய உரையில் ''யுக்திய, ராவய போன்ற இந்தப் பத்திரிகைகள் வடக்கிலும், கிழக்கிலும் பயங்கரவாதிகளுக்கு எதிராகப் போரிட்டு வருகின்ற படையினரின் ஊக்கத்தைக் குறைக்கும் வகையிலான பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றன. படையினரின் மனவுறுதியைக் குலைப்பதற்கான கட்டுரைகளை வெளியிட்டு வருகின்றன. இவ்வாறான கட்டுரைகளை பிரசுரிப்பது நாட்டுக்குச் செய்யும் துரோகமாகும். இவர்கள்தான் தேசத் துரோகிகள். எமது நாட்டை அந்நியர்களுக்குக் காட்டிக் கொடுத்த அதே துரோகிகளின் வாரிசுகளாக அவர்கள் இருக்கிறார்கள்'' எனக் குறிப்பிடுகிறார்.

சரி, கேள்வி இதுதான்.
யார் அந்தத் துரோகிகள்.
இந்தியாவா?
தமிழர்களா?

பெப்ரவரி 14ம் திகதி இரவு டி. பி. எஸ். ஜெயராஜ் தாக்கப்பட்டுள்ளார்.
இவர் கனடாவிலிருந்து வெளிவரும் ''செந்தாமரை''யின் ஆசிரியர்.
முன்னாள் ஐலண்ட் பத்திரிகையாளர்.
கால் முறிவுக்குள்ளான ஜெயராஜ் தற்போது வைத்தியசாலையில்.
கனடாவிலிருந்து கிடைத்த மிக நம்பகமான செய்தியொன்று இத் தாக்குதலின் பின்னணியில் புலிகள் இருந்தார்கள் என்பதை உறுதிப்படுத்திற்று.
ஆனால்,ஜெயராஜ் கடும்போக்கான புலி எதிர்ப்பாளராக இதுவரை இருந்ததில்லை.
இன்னும் சொன்னால் சார்புடையவர் எனலாம்.
ஆனால், கிட்டுவின் மரணத்தையொட்டிய செந்தாமரை இதழ்களில் கிட்டுவின் 'மற்றப்' பக்கத்தையும் எழுதப் போக, அது அவரது காலை முறித்துக் கொள்கிற அளவில் கொண்டு வந்து விட்டதாம்.

ஆக, புலிகளுக்கும், புலியிசத்திற்கும் ஒரு பக்கம்தான். அதை எழுதுவதை விடுத்து வேறென்ன எழுத வேண்டியிருக்கிறது?
அந்தப் ''பரம் பொருளின் பெரும்புகழைப் பாடிப் பணிதலன்றிப் பிற வார்த்தை என்ன பேச இருக்கிறது?'' என்று காலை முறித்து எழுத்துக்கு கடிவாளம் போட நினைத்திருக்கிறார்கள் போலும்.
ஆனால்,
எழுதுவது கையினால் தானே....?

இந்தியாவின் மதச்சார்பின்மை, தேசிய ஒருமைப்பாடு, ஜனநாயகம் என்பவற்றின் மீதான நம்பிக்கையை தகர்த்தது பாபர் மசூதி தகர்ப்பு.
மசூதிதகர்ப்புடன் இந்துத்துவத்தின் முகமூடி கிழிந்தது. மதச்சார்பின்மை என்பது சுத்தப் பம்மாத்தானது. தேசிய ஒருமைப்பாடு கேலிக்குள்ளானது. உண்மை வெளித் தெரியவாரம்பித்தது.

கரசேவை என்ற அதனது கோர சேவையின் போது சடாமுடி தரித்த இந்துத் துறவிகள் காவியுடையில் நடாத்திய தாண்டவத்தை வெளியுலகிற்கு கொண்டு வந்தார்கள் பத்திரிகையாளர்கள்.
தங்களது உண்மை சொரூபம் வெளித்தெரியவாரம்பிக்கிறது என்றவுடன் அந்தப் பத்திரிகையாளர்கள் மீது பாய்ந்தார்கள்.

உலகப்புகழ்பெற்ற பத்திரிகைப் புகைப்படக் கலைஞர்களான ரகுராய், பாப்லோ பரீத்தலோமியா, லட்விக் உட்பட, புதுடில்லிப் பத்திரிகையாளர்களான பர்வின், ஜெயின், நிதின்ராய், நச்சிரா குப்தா ஆகியோரும் பயங்கரமான தாக்குதலுக்குள்ளானார்கள்.
நச்சிரா குப்தாவும் இன்னொரு பெண்பத்திரிகையாளரும் பாலியல் பலாத்காரத்துக்குப் பலியாக்கப்பட்டுள்ளார்கள் காவியுடைச் சாமியார்களால். சுமார் இரண்டரை கோடி ரூபா பெறுமதியான கமெராக்கள், ஒலிப்பதிவு சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் சூறையாடப்பட்டும் சேதப்படுத்தப்பட்டும் உள்ளன.

இவை எவற்றையும் இந்து வெறிக் கட்சிகளான பாரதீய ஜனதாவோ, விஷ்வ ஹிந்து பரிஷத்தோ தடுக்கவுமில்லை, கண்டிக்கவுமில்லை.
இராவணன் கவர்ந்து சென்ற சீதையின் கற்பை மெய்ப்பிக்க இராமன் சீதையைத் தீக்குளிக்கக் கேட்டபோதே நீதி செத்துப் போயிற்று.
அந்த இராமனின் பெயரால் இந்தக் காவியுடைச் சாமியார்கள் நடாத்தி முடித்த பாலியல் பலாத்காரங்களுக்கும், அடாவடித்தனங்களுக்கும் மட்டும் எப்படி நீதி கிடைக்கும்?


நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சரிநிகர்

## மூதூர்ப்படகுப்பலி:

## யார் பொறுப்பு?




இது கடல் பலி கொள்கிற காலம் போலும்
கிளாலியில் பலி கொண்டது படையினர்.
இப்போது மூதூர்க் கடலில் பலி கொண்டது எது?
கடல் பயணத்திற்கு முற்றாகவே தகுதியற்ற படகா ?
அல்லது அளவிற்கு மீறிய பயணிகள் படகிலேற்றப்பட்டமையா?
முன்னரை விட பயணஞ் செய்வோர் தொகை அதிகரித்திருக்கின்றது. புதிய படகுச் சேவை அவசியம் என்று தெரிந்திருந்தும் கண்டு கொள்ளாமலிருந்த அரசா?
எது?

சரிநிகர் 'திக்விஜயம்' ஒன்றை மூதூருக்கு மேற்கொண்டது.
மூதூர் சோகம் கவிந்து போய் இருந்தது. யாரும் எதையும் எதிர்பார்த்திருக்கவில்லை.
பலர் படகோட்டியின் மேல் கோபப்பட்டார்கள்.
''மிதமிஞ்சிய எண்ணிக்கையில் பயணிகளையும், சாமான்களையும் ஏற்றியிருக்கிறார்கள் அதனால் தான் விபத்து ஏற்பட்டது '' என்பது கோபப்பட்டவர்களின் அபிப்பிராயம்.

இன்னும் சிலர் ''சனத்தினுடைய போக்குவரத்திற்கு வேறேது வழி; போக்குவரத்துச் செய்கிற சனங்களை எப்படிக் கட்டுப்படுத்த முடியும்? அரசாங்கம் வேண்டுமானால் படகுச் சேவையைக் கூட்டலாம், அல்லது இன்னும் புதிய படகுகளைச் சேவையில் அமர்த்தலாம். அதைச் செய்யாதது அரசின் பொறுப்பல்லவா? என்றனர்.

'அம்புலன்ஸ்' படகு ஒன்றை சேவையிலீடுபடுத்தும்படியும் இது தொடர்பாகவும் அரசிடம் பல முறை கோரிக்கை விடப்பட்டது. ஆனால் அரசு கணக்கில் கொள்ளவில்லை.

இவை பற்றி மேலும் விசாரித்ததில் கிடைத்த தகவல்கள் சிறுபான்மையின மக்கள் பற்றிய அரசின் ''அக்கறை'' பற்றி மேலும் கேள்விகளைக் குவிக்கிறது.

1980ம் ஆண்டுக்கு முன்னர் படகுச் சேவையானது ஓரளவிற்குத் திருப்தியான முறையில்தான் நடத்தப்பட்டு வந்திருக்கிறது. தனியார் படகுகளுடன், கூட்டுறவுச் சங்கம் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபை என்பனவும் படகுச் சேவைகளை நடாத்தி வந்திருக்கின்றன. 1960ம் ஆண்டுக்கு முன்னர் திருகோணமலைக்கும் மட்டக்களப்புக்கும் இடையிலான நேரடி பஸ் சேவை கிண்ணியா, மூதூரினூடாக நடத்தப்பட்டு வந்திருக்கின்றது. 1960ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தப் பஸ்சேவை முற்றாகவே நிறுத்தப்பட்டு விட்டது.இந்த விடயத்தை அங்குள்ள பெரும்பாலானோர் மறந்துவிட்டனர்.

பொதுவாக எந்தவொரு பிரதேசத்திலும், போக்குவரத்துக்குரிய மார்க்கங்கள் தொடர்ச்சியாக அபிவிருத்தியடைந்து கொண்டே செல்லும். ஆனால் மூதூரைப் பொறுத்த வரையிலோ இது தலைகீழாக நடந்து வந்திருக்கின்றது.முன்னர் இங்கு இருந்த போக்குவரத்து வசதிகள் கூட இன்று இல்லாத நிலை. இதற்கு யுத்த நிலைமையைக் காரணமாகக் கொள்ள முடியாது.ஏனெனில் இந்த யுத்தச் சூழல் மூதூரைப் பொறுத்த வரை 1985ம் ஆண்டுக்குப் பின்னர்தான் ஏற்பட்டது. ஆனால் அதற்குப் பல வருடங்களுக்கு முன்பே இங்கு திருகோணமலைக்கும் மட்டக்களப்புக்கும் இடையிலான நேரடி பஸ் சேவை நிறுத்தப்பட்டு விட்டது. கடல் பாதை மட்டுமே இம்மக்களின் போக்குவரத்துக்குரிய ஒரேயொரு மார்க்கமாக இருக்கின்ற போதிலும் 1980ம் ஆண்டிலிருந்தே படகுச் சேவை மிக மோசமாக சீரழிக்கப் பட்டு வந்திருக்கிறது.

திருகோணமலை - கிண்ணியா- மூதூர் -மட்டக்களப்பு என அமைந்திருக்கின்ற தரைவழிப் பாதையானது ஆரம்பத்தில் முற்றிலும் தமிழ், முஸ்லீம் மக்கள் வாழ்ந்த கிராமங்கள், நகரங்கள் என்பவற்றின் ஊடாகவே சென்றிருக்கின்றது. இந்த வீதியும் அதனூடான போக்குவரத்தும் தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்யப்பட்டிருக்குமாயின், அது அங்கு வாழ்கின்ற தமிழ், முஸ்லீம் மக்களினுடைய முன்னேற்றத்திற்கும் அந்த மக்கள் தமது சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார உறவுகளை நெருக்கமாக ஏற்படுத்திக் கொள்வதற்கும், அவர்களது புதிய குடியேற்றங்களுக்கும் வழி வகுத்திருக்கும். ஆனால் இந்த வீதியானது மிக நீண்டகாலமாகத் திருத்தப்படவேயில்லை. இந்த வீதியின் கணிசமான பகுதி தூர்ந்து போய் விட்டது. அத்துடன் இந்த வீதி ஊடறுத்துச் செல்கின்ற முஸ்லீம், தமிழ்க் கிராமங்களிடையே சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. உதாரணமாக திருகோணமலைக்கும்- கிண்ணியாவுக்கும் இடையே சிறிமாபுர, நாலாம் கட்டை...., கிண்ணியாவுக்கும்- மூதூருக்கும் இடையே உப்பாறு, கங்கைத்துறை..., மூதூருக்கும்- மட்டக்களப்புக்கும் இடையே சேருநுவர... என இந்த சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன.

இத்தகைய சிங்களக் குடியேற்றங்களோடு இணைந்ததாகத்தான் திருகோணமலை- கிண்ணியா- மூதூர்- மட்டக்களப்பு நேரடி பஸ்

**குகமூர்த்தி**

சேவை நிறுத்தப்பட்டதும் இடம் பெற்றிருக்கின்றது.இதற்குப் பிந்திய காலங்களில் குறிப்பாக 1970களில் வெருகல்துறை என்னும் இடத்தில் பாலம் அமைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் சேருவில விகாரைக்கு அப்போது பொறுப்பாக இருந்த பிரதம பௌத்த குருவின் கடுமையான எதிர்ப்பின் காரணமாகக் கைவிடப்பட்டன. மூதூருக்கும் கிண்ணியாவுக்கும் இடையே பாலங்கள் அமைப்பதற்கென சவூதி அரேபிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கோடிக்கணக்கான ரூபாய்கள் பாலங்கள் கட்டுவதற்குப் பாவிக்கப்படாமல், மகாவலித் திட்டத்தில் அமைந்துள்ள சிங்களக் கிராமங்களின் தேவைகளுக்காகப் பாவிக்கப் பட்டுள்ளது. மேலும் 1970களின் பிற்பகுதியில் மூதூர்- திருகோணமலை, மூதூர்- கொழும்பு என்று பிரதானமாக சிங்களக் குடியேற்ற கிராமங்களினூடாக செல்லக் கூடிய விதத்தில் பஸ் போக்குவரத்து மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றது.

இதே காலத்தில் கடல் போக்குவரத்திலும் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. 1980க்கு முன்னர் சேருவில விகாரைக்குச் செல்லுகின்ற சிங்கள மக்களும்,குடியேற்றப்பட்ட சிங்கள மக்களும் கடல் போக்குவரத்திலேயே பெரிதும் தங்கியிருந்தனர். ஆனால் பஸ் போக்குவரத்தானது மூதூரிலிருந்து கந்தளாயூடாக திருகோணமலைக்கும், கொழும்புக்கும் மாற்றியமைக்கப்பட்டதாலும், 1985களின் பின்னர் இங்கு ஏற்பட்ட போராட்டச் சூழலாலும் சிங்கள மக்கள் கடலில் பயணம் செய்வது வெகுவாகக் குறைந்து விட்டது. இதன் காரணமாக அதுவரை காலமும் ஓரளவுக்குச் சீரான முறையில் நடத்தப்பட்டு வந்த படகுச் சேவையும் கைவிடப்பட்டிருக்கின்றது.

மேற்படி தகவல்களிலிருந்து இந்த விபத்தானது வெறுமனே படகு சம்பந்தப்பட்ட விடயம் மட்டுமல்ல என்பதை அறிய முடிகின்றது. கூடவே இந்நாட்டிலுள்ள சிறுபான்மை சமூகங்களின்மீது சிங்கள இனவாத அரசு மேற்கொண்டு வருகின்ற திட்டமிட்ட இனச்சிதைப்பு நடவடிக்கைகளின் ஒரு வெளிப்பாடாகவும் இந்தப் படகு விபத்தைக் கருத வேண்டியுள்ளது. 1975ம் ஆண்டில்தான் புதிய தேர்தல் தொகுதியாக மாற்றப்பட்ட சேருவில, மிகக் குறுகிய காலத்திலேயே திட்டமிட்ட ரீதியில் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கின்ற போது, ஏறக்குறைய ஐம்பது மைல் நீளமுள்ள சேருவில- கந்தளாய் வீதி புதிதாக உருவாக்கப்பட்டு அந்த வீதிக்கு இடையேயுள்ள ஆற்றின் குறுக்கே நீண்ட பாலமும் அமைக்கப்பட்டிருக்கின்ற போது, எட்டு மைல்கள் மாத்திரமே நீளமான கிண்ணியா-மூதூர் வீதி தூர்ந்து போக விடப்பட்டமைக்கும் அதற்கிடையே பாலங்கள் அமைக்கப்படாமல் நிறுத்தப்பட்டமைக்கும் காரணம் என்ன? சிங்கள அரசின் இனவாத உணர்வைத் தவிர, இதற்கு வேறு என்ன காரணமாக இருக்க முடியும்?

படகு விபத்தை விசாரிப்பதற்கு ஆணைக்குழு அமைப்பதும் புதிய படகுகள் வழங்கப்படும் என்று உத்தரவாதம் தரப்படுவதும் மூதூர் மக்களின் உணர்ச்சிகளைத் தணித்து விடலாம். ஆனால் இவை உண்மையில் ''சிங்கள அரசின் திட்டமிட்ட இனச்சிதைப்பு நடவடிக்கைகள்'' என்ற பிரதான விடயத்திலிருந்து அவர்களின் கவனத்தை திசை திருப்பச் செய்கின்ற முயற்சிகளாகத்தான் அமையும்.

## முஸ்லிம்களின்....

உண்மையைப் பல்வேறு நாடுகளிலும் வாழ்கின்ற முஸ்லீம்கள் தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள். இதனால்தான் தமது பாரம்பரிய வாழிடங்களில் தமது உரிமைகளை நிலைநாட்டுவதற்காக இவர்கள் அயராது போராடி வருகிறார்கள்.

உலகம் எங்கும் நிலவுகின்ற இந்தப் பொதுவான உண்மையின் மூலம் இலங்கை முஸ்லீம்கள் தமது உரிமைகளை வென்று கொள்வதற்குரிய வலிமையான உந்து சக்தியைப் பெற்றுக் கொள்ள முடியும். தாம் நெருக்கடியும் சிக்கலுமிக்க ஒரு காலகட்டத்தை அடைந்திருக்கிறோம் என்ற எதார்த்த நிலையை இலங்கை முஸ்லீம்கள் புரிந்து கொள்ள வேண்டும். இலங்கையின் அரசியல் களத்தில் தமது தலைவிதியை நிர்ணயிக்கப் போகின்ற போராட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டது என்ற உண்மையை அவர்கள் மிகத் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். இப்போராட்டத்தில் தமது உரிமைகளை வென்று கொள்வது என்பது இந்த மண்ணுடன் அவர்கள் தம்மை உறுதியாகப் பிணைத்துக் கொள்வதில்தான் தங்கியுள்ளது தமது வேர், சந்ததி, இருப்பு ஆகிய அனைத்துமே இந்த மண்ணில்தான் உரிமை பெற்றிருக்கின்றது என்பதையும்; இப்போராட்டம் தமது உரிமைகளுக்கும் தங்கள் கௌரவத்திற்குமான போராட்டம் என்பதையும், அரபு நாடுகளோ அல்லது ஏனைய முஸ்லீம் நாடுகளோ இப் போராட்டத்தில் தமக்கு நேரடியாக உதவமாட்டா என்பதையும் இலங்கை முஸ்லீம்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களிடமிருந்து தம்மை வேறுபடுத்திக் காட்டவும், தமது உரிமைகளைக் கோரவும்,தமது பூர்வீகத்தை (''அராபியப் பாரம்பரியத்தை'' ) துணைக்கு அழைக்கும் முயற்சி இனியும் தேவையில்லை. ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட அரசியல் வரலாற்றினூடாக தாம் ''தமிழர்கள்'' அல்ல என்பதையும், ''தமிழ் பேசும் மக்கள்''/''இஸ்லாமியத் தமிழர்கள்'' என்ற வரையறைக்குள் தமது உரிமைகள் பேணப்படக்கூடாது என்பதையும் இலங்கை முஸ்லீம்கள் தெளிவாகவே உணர்த்தியிருக்கிறார்கள். இப்போது தேவைப்படுவது தமது உரிமைகளை வென்று கொள்வதற்கான சரியான முன்னெடுப்புகளே!

சரிநிகர் மாத இதழ் இல. 06 அலோசாலை, கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் :சபாலகிருஷ்ணன். அச்சுப்பதிவு:334, காலி வீதி, இரத்மலானை நவமக அச்சகம். 1993.03.01